விலை: 30.00

பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk



கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம்

1000/= + 300/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 21 சனிக்கிழமை (07.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262


## எழுக தமிழ் எழுச்சிப் பேரணி வரலாற்று பெரும் நிகழ்வாகட்டும்



### தாய்த் தமிழ் உறவுகளுக்கு சீமான் பேரழைப்பு

(சென்னை)

தமிழீழ தாயகத்தை சிதைத்து அழித்த சிங்கள அரசு போரின் பேரழிவுக்கு பிறகு தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. நமது வழிபாட்டுத்தலங்களை இடித்து தகர்த்த சிங்கள அரசு இன்று

23

## சொகுசு பஸ் - மோ.சைக்கிள் சாவகச்சேரியில் விபத்து

### இளைஞன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - மீசாலை ரயில் நிலையத்திற்கு அருகாமையில் ஏ9 வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து வந்த சொகுசு பஸ்

23

### நாளை ஞாயிறு

## ரணில் - சஜித் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அந்த கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பேச்சுவார்த்தை

23

## நானே ஜனாதிபதி வேட்பாளர்

# சஜித்தை ஓரங்கட்டினார் ரணில் விக்கிரமசிங்க

### ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்தில் அறிவிப்பு

### சஜித், மங்கள கூட்டத்தில் பங்குபற்றவில்லை



(கொழும்பு) ஜனாதிபதித் தேர்தலில் தானே போட்டியிடுவேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அலரிமாளிகையில் நடந்த கூட்டத்தில் அறிவித்தார். ஐ.தே.கவின் பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே ரணில் இந்த அறிவிப்பை விடுத்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## மருதனார்மடத்தில் வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதனார்மடப் பகுதியில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.


இதில் ஆறுமுகம் இராமச்சந்திரன் (வயது-66) என்பவரே உயிரிழந்துள்

23

### தமிழ்த் தேசியத்தை பலப்படுத்தும்

## எழுக தமிழ் பேரணிக்கு ஊறு விளைவிக்காதீர்கள்

### நீதியரசர் விக்னேஸ்வரன் கோரிக்கை



தமிழ்த் தேசியத்தை பலப்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் எழுக தமிழ் பேரணிக்கு ஊறுவிளைவிக்க வேண்டாம்என நீதியரசர்சி.வி. விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

03

### வடக்கு சுகாதார தொண்டர்களுக்கு

## 24 குழுக்கள் அமைக்கப்பட்டு 3 வாரத்தில் நேர்முகத்தேர்வு

### ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள இடம்பெறவுள்ள வட மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகத்தேர்வு, மூன்று பேரை உள்ளடக்கிய 24 குழுக்கள் அமைக்கப்பட்டு மூன்று வாரத்தில், நேர்முகத்தேர்வு நடத்தி முடிக்கப்படும் என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள

23

### தென்னிலங்கைத் தலைவர்கள்

## பெரும்பான்மை மக்களை தவறாக வழிநடத்துகின்றனர்

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

(கொழும்பு)

தென்னிலங்கையில் தேசிய தலைவர்களெனக் கூறிக் கொள்வோர், பெரும்பான்மையின மக்களை, தவறாக வழி நடத்தி வருவதாக தமிழ்த் தேசியக்

23

### இரும்பக உரிமையாளர் மீது

## வாள்வெட்டுக் குழுவினர் கோண்டாவிலில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இரும்பக உரிமையாளர் மீது வாள்வெட்டுக் குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் அவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக

23

### ரணில் தலைமையில்

## யாழில் கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

என்ரபிறைஸ் சிறிலங்கா நிறுவனத்தினரால் நடத்தப்படும் கண்காட்சி நிகழ்வு இன்று பிரதமர் ரணில் விக்கிர

23

## கோதுமை மாவின் விலை ரூ.5.50 சதத்தால் அதிகரிப்பு

### பாணின் விலை 2 ரூபாயால் கூடியது

(கொழும்பு)

கோதுமைமாவின்விலையை நேற்று முதல் பிறிமா நிறுவனம் அதிகரித்

23

## தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கம் கூட்டமைப்பிடம் கிடையாது

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த குற்றச்சாட்டு

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கிடையாது என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார்.

அத்துடன் ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் நாட்டில் அபிவிருத்திகள் முன்னெடுக்

23

# பொது அமைப்புக்களுக்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு



எழுக தமிழ் தொடர்பாக வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடலுக்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

போர்க்குற்ற விசாரணையை நடாத்து, அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உடனடியாக விசாரணை செய், வடக்கு - கிழக்கில் இராணுவமயமாக்கலை நிறுத்து, இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் குடியமர்த்து போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி எதிர்வரும் 16.09.2019 ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளியில் எழுக தமிழ் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் எழுக தமிழ் பேரணிக்கு வலு சேர்க்கும் முகமாக இன்று சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் வவுனியா வாடி வீட்டில் பொது அமைப்புக்களின் உடனான சந்திப்பை, தமிழ் மக்கள் பேரவையும் தமிழ் மக்கள் பேரவையின் அங்கத்துவ கட்சிகளும் ஏற்பாடு செய்துள்ளன. (ம-3)


## காணி விற்பனை

யாழ் கே.கே.எஸ் வீதியில் தெல்லிப் பழை சந்திக்கு அண்மையில் தந்தை செல்வா ஆரம்ப பாடசாலைக்கு எதிராக கே.கே.எஸ் வீதியை முகப்பாக கொண்ட 11 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 077 953 0496**

**Whatsapp Number :**
**006141985619**

(110)

## வெல்லப்பட்ட பரிசுத்தொகை

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ்ப்பாண முகவர் கனகலிங்கம் திலகவதி விற்பனை செய்யப்பட்ட 05.09.2019 அன்றைய **சுப்பர்போல்** டிக்கட்டில் 04 இலக்கங்களைக் கொண்ட முதல் பரிசாக ரூபாய் **10 இலட்சம்** வெல்லப் பட்டுள்ளது.

கனகலிங்கம் திலகவதி (யாழ் முகவர்)
வைரவர் கோவில் பின்புறம்
யாழ் நகரம்

(111)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தகோகிலம் பாக்கியராசா



வல்லைவீதி தொட்டிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தகோகிலம் பாக்கியராசா 05.09.2019 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராசா - மங்களேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்பையா தம்பதிகளின் மருமகளும், பாக்கியராசாவின் மனைவியும், யாழினி (தருமபுரம்), தயானி (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேந்திரராசா (குமார் - ஜேர்மன்), தருமராசா (கனடா), காலஞ்சென்ற குலேந்திரராசா (திருப்பதி - சிறுப்பிட்டி), யோகராசா மற்றும் வனிதகோகிலம் (கொழும்பு), இரவீந்திரராசா (கிளிநொச்சி), காலஞ்சென்ற நாகேந்திரராசா (ஒப்பிலான்), திருப்பதி (சுகி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீபன் (C.D.O தருமபுரம்), மகிந்தன் (பணியாளர் Mobail Doctor - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்லைவீதி,
தொட்டிலடி, சங்கானை.

(112)

தகவல் : குடும்பத்தினர்
077 175 1228

## யாழ் விருதிற்கான வாழ்த்து



### பொன்.பாலசுந்தரம்பிள்ளை

எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனும் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான **பொன்.பாலசுந்தரம்பிள்ளை** அவர்கள் யாழ்.மாநகர சபையினரால் அண்மையில் யாழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவர் மேலும் பல விருதுகள் பெற்று கல்லூரி அன்னைக்கு பெருமை சேர்க்க வேண்டுமென சிவஞான வைரவபெருமானையும் ஞானலிங்கேச்சுவரப் பெருமானையும் வேண்டுவதுடன், யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் பேரவை சார்பாக வாழ்த்துகிறேன்.

அதிபர், தலைவர், பழைய மாணவர் பேரவை,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C-7526)


## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

union assurance
Trust in your tomorrow, today

## தொழில் வாய்ப்புகள் யாழ் பிராந்தியம்

◎ முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 25,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்




உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 18.09.2019க்கு முன்னர் **tharmalingamk@ualink.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் (09)

### "எழுக தமிழ்" எனது கட்சி சார்பாக நடத்தப்படவில்லை

# தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தும் பேரணிக்கு ஊறுவிளைவிக்காதீர்கள்



## வடக்கு-கிழக்கிலிருந்து அலை அலையாக மக்கள் திரண்டு தீர்க்கமான ஒரு செய்தியைத் தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் தெரிவிக்க வேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"எழுக தமிழ்" எழுச்சிப் பேரணி எனது கட்சி சார்பாக நடத்தப்படவில்லை. எனவே தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தும் இந்நிகழ்வுக்கு யாரும் ஊறுவிளைவிக்காதீகள்! என்று கேட்டுக் கொள்கின்றேன். என்னால் முடிந்தளவுக்கு இந்தப்போராட்டத்துக்கான உதவியை நான் செய்துவருகின்றேன். எனவே அன்றைய தினம் வடக்கு-கிழக்கில் இருந்து அலை அலையாக எமது மக்கள் யாழ்.முற்றவெளியில் திரண்டு தீர்க்கமான ஒரு செய்தியைத் தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரிவிக்க வேண்டும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்தார். ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கேள்வி பதில் அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி: கடந்த முறை ஒழுங்கு செய்யப்பட்ட எழுக தமிழ் பேரணி மூலம் ஏற்பட்ட நன்மை என்ன? இதனால் ஏற்பட்ட தாக்கம் என்ன?

பதில்:தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பெரும் நிகழ்வாக 2016 ஆம் ஆண்டு எழுக தமிழ் நிகழ்வை செய்திருந்தோம். அப்போதைய கால கட்டத்தில் பல்வேறு அடக்கு முறைகளுக்கு முகம் கொடுத்திருந்தவேளை பல்லாயிரக்கணக்கான எமது வடக்கு-கிழக்கு மக்கள் அணிதிரண்டு மேற்கொண்ட போராட்டமாக இது அமைந்திருந்தது. யுத்தம் முடிவடைந்து தோல்வி மனப்பான்மை, அச்சம் ஆகியவற்றால் எமது மக்கள் துவண்டு போயிருந்த நிலையிலும் இந்த நிலைமையை பயன்படுத்தி எமது மக்கள் மீது அரைகுறை தீர்வு ஒன்றைத் திணிப்பதற்கு பல்வேறு சக்திகளும் கங்கணம் கட்டி நின்றவேளை எமது மக்கள் அடக்கு முறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தமது உரிமைகளையும் நீதியையும் வலியுறுத்தி மேற்கொண்ட போராட்டம் என்ற வகையில் மிகவும் முக்கியத்துவம் மிக்க நிகழ்வாக இந்தப் பேரணியைப் பார்க்கின்றேன். இது சிங்கள அதிகார வர்க்கத்துக்கும், சர்வதேச சமூகத்துக்கும் மிகவும் தெளிவான ஒரு செய்தியை சொல்லி இருந்தது. அதாவது, தமது உரிமைகளும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியும் கிடைக்கும் வரை ஓயப்போவதில்லை என்ற செய்தியையும் எவரும் தம்மை இலகுவில் ஏமாற்றி அரைகுறை தீர்வு ஒன்றை திணிப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை என்ற செய்தியையும் சொல்லியிருந்தார்கள். அத்துடன் அரசியல் கட்சிகளும் வெகுஜன அமைப்புக்களும் ஒன்றுசேர்ந்து ஒருங்கிணைந்து மேற்கொண்ட இந்த நிகழ்வு யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் ஒரு பெரும் நம்பிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் ஊட்டுவதாக அமைந்திருந்தது. சமூகத்தில் மகத்தான மருத்துவ சேவை ஆற்றும் பிரபல்யமான மருத்துவர்கள், மீன்பிடி சமாசங்கள், வர்த்தக சம்மேளனங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று எமது சமூகத்தின் எல்லா மட்ட மக்களும் இந்தப் போராட்டத்தை ஒற்றுமையாக மேற்கொண்டு "நாங்கள் வீழ்ந்து விடவில்லை. நாம் விழ விழ மீண்டும் மீண்டும் எழுவோம்" என்று கிளர்ந்து எழுந்திருந்தார்கள். இது சாத்வீக ரீதியான போராட்ட தத்துவத்தின் அடிப்படையில் மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகின்றேன். கடந்த முறை நாம் நடத்திய "எழுக தமிழ்" நிகழ்வு தென்னிலங்கை ஊடகங்களிலும் இலங்கை பாராளுமன்றத்திலும் முக்கியமான பேசுபொருளாக இருந்தமையை நீங்கள் அறிவீர்கள். தமிழ் மக்கள் வீழ்ந்துவிட்டார்கள் இனி மீளவும் எழமாட்டார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்த சிங்கள பேரினவாதத்தின் சிந்தனையில் ஒரு தாக்கத்தை இது நிச்சயமாக ஏற்படுத்தி இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

கேள்வி: தற்போது நீங்கள் மேற்கொண்டுவரும் "எழுக தமிழ்" பேரணி ஏன் அவசியம்?

பதில்:நான் ஏற்கனவே கூறிய காரணங்களின் அடிப்படையில் தற்போது நாம் ஒழுங்கு செய்துவரும் "எழுக தமிழ்" பேரணி அவசியமானதாக இருக்கின்றது.

அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகத் தமிழ் மக்கள் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இன்று நின்றுகொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் இருப்பை வடக்கு- கிழக்கில் இல்லாமல் செய்யும் பொருட்டு அரசாங்கத்தின் திட்டமிட்ட நில அபகரிப்பு நடவடிக்கைகளும் சிங்களக் குடியேற்றங்களும் பௌத்தமயமாக்கலும் முன்னெப்போதையும் விட அதிகரித்துள்ளன. 10 வருடங்கள் ஆகியுள்ளபோதிலும் இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்ட எமது மக்களுக்கு எந்த நீதியோ தீர்வோ வழங்கப்படவில்லை.இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் கட்சிகளையும் மக்களையும் சரியான பாதையில் நெறிப்படுத்தி போராட்ட பாதையைச் செம்மைப்படுத்துவதற்கு சிவில் சமூகம் மிகவும் காத்திரமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ளவேண்டி இருக்கின்றது. சிவில் சமூகம் என்பது மக்களை பிரதிபலிப்பது. சத்தம் இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தத்துக்கு எதிராக எமது மக்களின் எதிர்ப்புக்களை வலுவூட்டுவதற்கும் எமது இந்த துன்பங்களை தொலைதூரத்தில் இருக்கும் எமது சக பூகோள பிரஜைகளுக்கும் அதிகார மையங்களுக்கும் கொண்டுசென்று இந்த அநியாயங்களுக்கு எதிராக அவர்களை நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதற்குமான நடவடிக்கைகளை நாம் செய்யவேண்டும். எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அநியாயங்கள் மற்றும் அட்டூழியங்களை நாம் வெளி உலகத்துக்கு எவ்வளவுக்கு எவ்வளவு வெளிப்படுத்துகிறோமோ எவ்வளவுக்கு எவ்வளவு யதார்த்தநிலையை அவர்களுக்கு எடுத்துக் கூறுகின்றோமோ எவ்வளவுக்கு எவ்வளவு எமது வலிகளை அவர்களின் வலிகளாக உணரும்படி செயற்படுகின்றோமோ அப்பொழுதுதான் ஏனையசமூகங்களை நாம் எம்மை நோக்கிக் கவனம் செலுத்த வைக்கவும் எமக்காக செயற்படவும் செய்யவும் முடியும். எமது துன்பங்கள், துயரங்களை எடுத்துக்கூறி ஒரு "பகிரப்பட்ட மனிதநேய உணர்வை" சர்வதேச ரீதியில் ஏற்படுத்துவதற்கு பாடுபடும் அதேவேளை, அநியாயங்களுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் வலுப்படுத்தவேண்டும். ஆகவே தான், 9 அம்சங்களை வலியுறுத்தி இந்த "எழுக தமிழ்" பேரணியை நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

கேள்வி: ஜனாதிபதித் தேர்தல் வரவிருக்கும் நிலையில் தமிழ் மக்களை ஒன்று திரட்டி செய்தி ஒன்றை கூறுவது இந்த "எழுக தமிழ்" பேரணியின் ஒரு முக்கியத்துவம் என்று கூறலாமா?

பதில்:நிச்சயமாக! எவர் ஆட்சிக்கு வந்தாலும், எமது உரிமைகள் இவைதான். இதில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என்பதையும் நான் மேற்கூறிய எமது நியாயமான கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் இந்த "எழுக தமிழ்" வலியுறுத்துகின்றது. அதற்காக ஜனாதிபதித் தேர்தலை கவனத்தில் எடுத்து நாம் இந்த "எழுக தமிழை" ஒழுங்கு செய்யவில்லை. ஏற்கனவே இதன் அவசியத்தை உணர்ந்து செயற்படத் தொடங்கிவிட்டோம். தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஒரு மக்கள் இயக்கமாக மேற்கொண்டுவரும் அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியே இந்த "எழுக தமிழ்". சுபீட்சமான ஒரு இலங்கையை கட்டி எழுப்புவதற்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை சிங்களத் தலைவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். கடந்த காலங்களில் தமிழ் மக்களை அடக்குமுறைகளுக்குட்படுத்தி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இனவாத சிந்தனையுடன் செயற்பட்டமை எந்தளவுக்கு இலங்கையின் முன்னேற்றத்தை பாதித்து அதன் வளர்ச்சியை பின்னுக்குத் தள்ளி இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு தேர்தலில் வெற்றிபெறும் ஜனாதிபதியும் அரசியல் கட்சிகளும் இனிமேல் செயற்பட வேண்டும் என்பதற்காகவே பின்வரும் 9 அம்சங்களையும் வலியுறுத்தி இருக்கின்றோம். அவையாவன:

1.எமது பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பு, பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். இவை சம்பந்தமான மகாவலி அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகள் வட- கிழக்கைப் பொறுத்தவரையில் உடன் நிறுத்தப்பட வேண்டுமா? என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்.

2.சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் தற்போது ஏற்பட்டுள்ள தேங்கு நிலை மாற்றப்பட்டு உடனே சர்வதேச விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்கள் யாவரும் சர்வதேச சட்டக் கொள்கைகளுக்குப் புறம்பான சட்டமொன்றினால் குற்றவாளிகள் ஆக்கப்பட்டவர்கள் என்பதை உலகறியச் செய்ய வேண்டும். குறித்த சட்டம் இன்னமும் கைவாங்கப்படவில்லை.

4.வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான நம்பத்தகுந்த விசாரணைகள் நடைபெற வேண்டும். வருடக் கணக்கில் போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு குறித்த ஒரு காலத்தினுள் விசாரணைகள் நடைபெறும் என அரசினால் உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும்.

5.வட-கிழக்கு மாநிலங்களில் இராணுவமயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும். தற்போது இலங்கை இராணுவத்தின் மூன்றில் இரண்டு பங்கினர் வட-கிழக்கு மாகாணங்களிலேயே முகாமிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

6.இடம்பெயர்ந்த எம் மக்கள் அனைவரும் அவரவர்களின் பாரம்பரிய காணிகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

7.வடக்கு- கிழக்கில் ஏற்படும் பதவி வெற்றிடங்களுக்கு திட்டமிட்ட முறையில் சிங்கள மக்கள் நியமிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

8.யுத்தம் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும் யுத்தத்தால் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இன்னமும் மீளக் கட்டி எழுப்பப்படவில்லை. எனவே, யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு விசேட பொறிமுறை உருவாக்கப்பட்டு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பப்படவேண்டும். சர்வதேச சமூகம் இதற்கான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்க வேண்டும்.

9.தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை பொதுமக்களின் ஆலோசனைகளை பெற்று அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ள முன்மொழிவுகள் அடிப்படையில் தீர்வுக்கான பேச்சுவார்த்தை மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.


கேள்வி: தமிழ் மக்கள் கூட்டணியின் ஒரு அரசியல் பிரசாரமாகவே இந்த "எழுக தமிழ்" பேரணி ஒழுங்குசெய்யப்படுவதாக ஒரு சில விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: இது முற்றிலும் விஷமத்தனமான பிரசாரம்! நான் ஏற்கனவே கூறியபடி, இந்த "எழுக தமிழ்" பேரணியை நாம் 2016 ஆம் ஆண்டு நடத்திய "எழுக தமிழின்" ஒரு தொடர்ச்சியே. அப்போதும் நான் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராக இருந்தேன். இப்போதும் நான் இணைத் தலைவராக இருக்கிறேன். ஒரே ஒரு வித்தியாசம். அப்போது நான் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்று ஒரு கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருந்தேன். தற்போது நான் ஒரு அரசியல்கட்சி சார்பில் தலைவராக இருக்கின்றேன். நான் தமிழ் மக்கள் கூட்டணியை ஆரம்பித்த பின்னர் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டங்களில் பேரவையின் இணைத் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக கூறி இருந்தேன். ஆனால் பேரவையின் நன்மை கருதி என்னைப் பதவி விலக வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். மூன்று முறை தொடர்ந்தும் கேட்டுவந்தும் என்னைப் பதவி விலகாதீர்கள் என்றே கூறி வந்தார்கள்.

நான் ஏற்கனவே கூறியபடி தற்போதைய சூழ்நிலையில் எழுக தமிழை நடத்துவது மிகவும் அவசியமான ஒன்று. இதனூடாக எந்த அரசியல் இலாபத்தையும் நான் எதிர்பார்க்கவில்லை. பதவியையும், அரசியல் இருப்பிடத்தையும் முக்கியமாக கருதி இருந்தால் நான் தொடர்ந்தும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிலேயே இருந்திருக்கலாம். "எழுக தமிழ்" பேரணி எனது கட்சி சார்பாக நடத்தப்படவில்லை. பொது அமைப்புக்களே மிகவும் கஷ்டப்பட்டு இதற்கான பிரசாரப் பணிகளையும் ஏற்பாடுகளையும் செய்துவருகின்றீர்கள். ஆகவே அவர்களின் கடின முயற்சிகளுக்கு எதிராக மண் தூவாதீர்கள் என்று வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். ஆதரவு அளிக்காவிட்டாலும் பரவாயில்லை. தயவுசெய்து எதிரான செயற்பாடுகளைச் செய்யாதீர்கள். தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தும் ஒரு நிகழ்வுக்கு ஊறுவிளைவிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.செப்டெம்பர் 16 ஆம் திகதி நடைபெறும் "எழுக தமிழ்" நிகழ்வை தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான மருத்துவர் லக்ஷ்மனே தலைமை தாங்கி நடத்துவார். அவரது வழிகாட்டலிலேயே ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. என்னால் முடிந்தளவுக்கு இந்தப் போராட்டத்துக்கான உதவியை நான் செய்துவருகின்றேன். அன்றைய தினம் வடக்கு-கிழக்கில் இருந்து அலைஅலையாக எமது மக்கள் யாழ்.முற்றவெளியில் திரண்டு தீர்க்கமான ஒரு செய்தியைத் தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரிவிக்க வேண்டும். தயவுசெய்து இன்றே செப்டெம்பர் 16 ஆம் நாளை குறித்துவைத்துக் கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

**க.கனகேஸ்வரன்**

உதவி அரசாங்க அதிபர்
(பிரதேச செயலகம்
மருதங்கேணி)

பிரதேச செயலராகப் பணியாற்றி யாழ். மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் உயர்திரு. **க.கனகேஸ்வரன்** ஐயா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அளப்பரிய சேவை எம்மக்களுக்கு ஆற்றிய எம் உள்ளம் கவர்ந்த பிரதேச செயலர் உயர்திரு. **க.கனகேஸ்வரன்** ஐயாவே உமது தியாக சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.

தன்னலமற்ற சேவையின் தன்னிகரில்லாத் தலைவனே எண்ணிய கருமம் கண்ணியமாய் முடிப்பீரே எம் கிராமத்தின் அபிவிருத்தியில் அதிக ஆர்வம் தந்தவரே மறவாது உமது சேவையை நன்றியுடன் நினைக்கின்றோம்.

மக்கள் சேவையே மகத்தான சேவை என்று மாண்புடன் செயற்பட்ட செயல்த்திறன் வீரனே பக்கசார்புகள் பாகுபாடு பேதங்கள் உம்மிடம் இல்லையே மக்கள் எல்லாமே சமத்துவம் என்பவரே.

தியாகங்கள் பல புரிந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டவரே மேன்மையுடன் உயர்பதவிபெற்றதனால் மேலதிக அரசாங்க அதிபராகப் பணிபுரியச் செல்பவரை மேலும் உயர்பதவிகள் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-** பங்குத்தந்தையுடன்
மணற்காடு கிராம அபிவிருத்திச் சங்கமும்
கிராம மக்களும். (C-7527)

– ஏகமனதாக கோரினால் –

# ஜனாதிபதித் தேர்தலில் நானும் போட்டியிடுவேன்

## சபாநாயகர் கருஜயசூரிய

(கொழும்பு)

நாட்டில் தற்போது இடம்பெறும் அதிகாரப் போராட்டத்தில் அங்கம் வகிக்க விரும்பாத போதிலும், எதிர்கால தலைமுறையினருக்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இருப்பதாக சபாநாயகர் கருஜய சூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு இதற்கு முன்னரும் மதத் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. எனினும் இந்த அதிகாரப் போராட்டத்தில் தான் அங்கம் வகிக்க விரும்பவில்லை.

எனினும் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களால் அவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அவை தொடர்பில் ஆராயலாம்.

எனினும் அனைவரும் ஒன்றிணைந்து ஏகமனதாக கோரினால் மாத்திரமே இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்த முடியும். எவ்வாறிருப்பினும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஏனைய கட்சிகளினதும் அமைப்புக்களினதும் ஆதரவும் அத்தியாவசியமானதாகும் என்றும் கூறினார்.

சிவில் சமூக ஆர்வலர்களுடன் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-3)

# எல்பிட்டி- அளுத்கமவில் பேருந்தில் துப்பாக்கிச்சூடு

## ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அரச பேருந்து ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் எல்பிட்டி -அளுத்கம வீதியின் அடகோஹொட 8 ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை அளுத்கமவில் இருந்து எல்பிட்டி நோக்கிப் பயணித்த அரச பேருந்து ஒன்று அடகோஹொட பாலத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டது.

இதன்போது, பேருந்தில் ஏறிய ஒருவர் குறித்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொ்ண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் பாதாள உலகக் குழு தலைவர்களில் ஒருவரான கொஸ்கொட சுஜீக்கு தொடர்பிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவர் எல்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை ஒன்றுக்காக நீதிமன்றத்துக்கு சென்று கொண்டிருந்தவர் மீதே இந்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)


“எந்தையும் தாயும் சந்நிதியானே”

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி வேலவர் மீது
பாடப்பெற்று வரும் பக்திப்பாடல்களின் தொடர்

# “சந்நிதி வசந்தம் - 5” இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு

**காலம்:- 8.9.2019 ஞாயிறு பி.ப. 3.00 மணி (பூங்காவனத் திருவிழாவன்று)**

**இடம்:- செல்வச்சந்நிதி ஆலயம்.**


ஆசிரியர் துரை. கணேசமூர்த்தியின் பாடலாக்கத்தில்
ஈழத்து, தமிழகப்பாடகர்கள் சந்நிதி
வசந்தம் பாடல்களை பாடிவர
வெளியீட்டிற்கான ஒருங்கிணைப்பை
ஏழாலை ஸ்ரீமுருகன் அதிபர்
செ.பரமேஸ்வரன் மேற்கொண்டு
வருகின்றார்.




விளம்பர அனுசரணை
அனோஜன் ரேடர்ஸ்
கே.கே.எஸ். றோட்,
மல்லாகம்.

(106)

ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම් හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு
Ministry of National Polocies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development and Youth Affairs

# வடமாகாண அபிவிருத்தி



வடமாகாணத்தில்
7,615 வீடுகள்

யாழ்ப்பாணத்தில
2,565 வீடுகள்

10,000 வீட்டுத்திட்டம



2019 வரவுசெலவுத்திட்டத்தில் ரூ.238 மில்லியன்.
9,000 மீனவக்குடும்பங்கள் நன்மை,
**ADB** கருத்திட்டத்தில் $ 150 மில்லியன்

குருநகர், மையிலிட்டி மற்றும் பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி



யாழ்ப்பாணத்தில்
1,293 பட்டதாரிகள

வடமாகாணத்தில்
1,016 தொண்டர் ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள்

1,922 பட்டதாரி பயிலுநர் மற்றும் 1,016 தொண்டர் ஆசிரியர்கள் நியமனம



தெல்லிப்பளை வைத்தியசாலை /உளவியல் சார்ந்த மையம் ரூ.156 மில்லியன்

வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் உளவியல் சார்ந்த மையம்



விசேட வரவுசெலவுத்திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு 2019 - ரூ.2,500 மில்லியன், 2020 - ரூ.2,500 மில்லியன். மேலதிகமாக புலம்பெயர் கொடையாளிகலிடமும் நிதி பெறப்படும்

வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்திக்கு பனை அபிவிருத்தி நிதி



மீள்குடியேற்ற செயற்திட்டங்களுக்கு
வடமாகாண
ரூ.1,300 மில்லியன்
யாழ்ப்பாணம்
ரூ.678 மில்லியன்

கல்வி, சுகாதாரம் மற்றும் நீர் வழங்கல்



துரித கிராமிய அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு
வடமாகாணம் - ரூ.5,230 மில்லியன்,
யாழ்ப்பாணம் - ரூ.3,048 மில்லியன

துரித கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு




பலாலி விமானநிலைய அபிவிருத்தி:கட்டம் 1 - ரூ.2,000 மில்லியன் ஓடுபாதை, மேல்தூக்கி பாதை, முனைப்பு, பயணவழிகாட்டி முறை, கட்டம் 2 – 20,000 மில்லியன்

பலாலி பிராந்திய விமானநிலைய அபிவிருத்தி



கலாச்சார மண்டபக் கட்டடம் ரூ.1,800 மில்லியன்,
12 மாடிகளைக் கொண்ட அரங்கம், காட்சியகம், மிதக்கும் மண்டபம்

இந்திய உதியுடன் யாழ்ப்பாண கலாச்சார மண்டபம்



வடமாகாண பனை பதநீர்/வெல்லம் சார்ந்த உற்பத்தி
ரூ.223 மில்லியன்

வெல்லம் /பதனீர் போத்தலில் அடைத்தல் மற்றும் உற்பத்தி



Desalination Plant
$100 million

கீழ் பாலியாறு சாத்தியவள ஆய்வு ஆரம்பம்

உயர்மேம்பாட்டு நீர் வழங்கல் திட்டம்



மிதிவெடி அகற்றலில் மொத்தம் 1,282.43 கி. மீ. பரப்பளவு காணி விடுவிப்பு, 18.55 கி.மீ. பரப்பளவு விடுவிக்க வேண்டியுள்ளது.

மிதிவெடி அகற்றல்



வடமாகாண
கோவில்கள்
அபிவிருத்தி
ரூ.200 மில்லியன்

சமய வணக்கத்தலங்கள் அபிவிருத்தி



வடமாகாணத்தில் **ADB** நிதியில் **i-roads** 17 திட்டங்கள் 343 வீதிகள், 1,034 கி.மீ. மதிப்பீட்டுத் தொகை ரூ.51 பில்லியன்

i-Road

# வடக்கு அபிவிருத்திக்கான முதலீட்டு உதவி நிகழ்ச்சித்திட்டம்; 200 மில்லியன் ரூபாய் கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம்

## அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தகவல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்ட வடமாகாண அபிவிருத்திக்கான சிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 200 மில்லியன் ரூபாய் கருத்திட்டங்கள் அனு மதிக்கப்பட்டு உடனடியாக அமுல்படுத்தப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.



இது தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் குருநகர் கடற்றொழில் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் எரிபொருள் நிலையம், மீன்பிடி உபகரணங்களுக்கு 30.3 மில்லியன் ரூபாவும், காரைநகர் மீன் உற்பத்திகளைப் பதப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பு ஆகியவற்றிற்கு 5.2 மில்லியன் ரூபாவும் அச்சுவேலியிலுள்ள தொழிற்சாலைக்கு போத்தலில் கள் மற்றும் பதனீர் அடைக்கும் இயந்திர உபகரணங்களுக்கு 1.3 மில்லியன் ரூபாவும் பால் சார்ந்த உற்பத்திகளை பதப்படுத்தல் பெறுமதி சேர்க்கை போன்றவற்றிக்கு லிப்கோ கூட்டுறவுச்சங்க வேலைத்திட்டங்களுக்கு 6.4 மில்லியன் ரூபாவும் மரவேலை தொடர்பான இயந்திர வசதிகளுக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 3.5 மில்லியன் ரூபாவும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் உற்பத்தி இயந்திர உபகரணங்களுக்கு 7.7 மில்லியன் ரூபாவும் ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மீன்பிடி பெறுமதி சேர்க்கை விநியோக வசதிகளுக்கு 13.9 மில்லியன் ரூபாவும் சாவகச்சேரி கருப்பட்டி உற்பத்திகளுக்கான நவீன தொழில்நுட்ப வசதிகளுக்கு பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு 10 மில்லியன் ரூபாவும் பதனீர், கள் போத்தலில் அடைப்பதற்கான நவீன இயந்திர உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும் ஊர்காவற்றுறையில் பதனீர், கள் போத்தலில் அடைப்பதற்கான நவீன இயந்திர உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூப்பாவும் சண்டிலிப்பாய் பதனீர், கள் நீர்வேலி வாழை நார் அடிப்படையிலான உற்பத்திகள் உள்ளடங்கலாக 102.89 மில்லியன் ரூபா பெறுமதியான கருத்திட்டங்கள் இவ்வாரத்தில் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் பலநோக்கு கூட்டுறவுச்சங்க வெதுப்பக அபிவிருத்திக்கு 2.7 மில்லியன் ரூபாவும் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குதேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதற்கான இயந்திர உபகரணங்களுக்கு 1.9 மில்லியன் ரூபாவும் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மீன் பதப்படுத்தும் இயந்திர உபகரணங்களுக்கு 2.1 மில்லியன் ரூபாவும் திருவையாறு கமத்தொழில் கூட்டுறவுச்சங்க பங்காண்மையுடன் இணைந்த பழச்சாறு, ஜாம் உற்பத்திகளுக்காக 6.78 மில்லியன் ரூபாவும் பளை, கௌதாரிமுனை, முக்கொம்பன் பெண்கள் அமைப்பால் முன்னெடுக்கப்படும் திட்டத்திற்கு 1 மில்லியன் ரூபாவும் ஆக 17.33 மில்லியன் ரூபா பெறுமதியான கருத்திட்டங்கள் இவ்வாரத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பனை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பழச்சாறு உற்பத்தி செய்யும் உபகரணங்களுக்கு 7.3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்வாரத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மரிடைம்பற்று பனை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பதனீர் மற்றும் கள் போத்தலில் அடைக்கும் உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும் புதுக்குடியிருப்பு பதனீர் மற்றும் கள் போத்தலில் அடைக்கும் உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும் மரிடைம்பற்று பழச்சாறு அடைக்கும் உபகரணங்களுக்கு 2.5 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக புளியமுனை கடலை பதப்படுத்தும் உபகரணங்களுக்கு 1.5 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மேற்கு பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பனம் பழச்சாறு பதப்படுத்துவதற்கான உபகரணங்களுக்கு 12 மில்லியன் ரூபாவும் அபிச்சியன் குளம் கால்நடை உற்பத்தி பதப்படுத்தலுக்காக 2.2 மில்லியனுமாக 33.05 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் கிழக்கு மற்றும் தலைமன்னாரில் பழச்சாறு பிரித்தெடுக்கும் உபகரணம் மற்றும் பனங்களி பிரித்தெடுக்கும் உபகரணங்களுக்காக 16.69 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம் முதலீட்டு உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் உற்பத்திகளை உயர்த்தி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அடித்தளமாக அமையும் என அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார். (இ-7)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை

## ஆனந்தசங்கரி கவலை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு பத்து வருடங்களாகியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள் மக்களைப்பற்றி சிந்திக்காது செயற்படுகின்றனர் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.



ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி முள்ளிக்கிராம பொது மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் படும் வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பத்து வருடங்களாகியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள் மக்களைப் பற்றி சிந்திக்காது செயற்படுகின்றனர்.

என்றுமில்லாதவாறு நல்லாட்சி என்று கூறப்படுகின்ற இந்த அரசு தான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகளவு சலுகைகளையும் கொடுப்பனவுகளையும் தாராளமாக அள்ளி வழங்குகின்றது. ஆனால் மக்களுக்கு எதுவிதமான உதவிகளும் சலுகைளும் கிடைப்பதில்லை.

அதுமட்டுமல்ல, நான் அன்று தொட்டுக்கூறி வருகின்றேன் 1970 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இருந்ததைப் போன்று, கூப்பன் முறைமையை நடைமுறைப்படுத்தி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பெருந்தோட்டப் பகுதியில் அன்றாடம் பிரச்சினைகளை எதிர் நோக்கும் மலையக மக்களுக்கும் பங்கீட்டு முறையில் உப உணவுப் பொருட்களை வழங்கால் அவர்களின் வாழ்வாதாரம் ஓரளவு மேம்படும். ஆனால் இதுபற்றி பாராளுமன்றத்தில் யாரும் பேசுவதில்லை. நல்ல திட்டமாக இருந்தாலும் ஆனந்தசங்கரி கூறிவிட்டாரே இதைப் பற்றி நாம் பாராளுமன்றத்தில் எப்படிப் பேசுவது என்று நினைக்கின்றார்கள் போலும். யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டதற்கும், பலர் அங்கவீனர்களாக இருப்பதற்கும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டதற்குமான முழுப் பொறுப்பையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே பொறுப்பேற்க வேண்டும்.

அதற்கு பிராயச்சித்தம் தேடுவதற்காக முள்ளிவாய்காலில் நினைவுச்சின்னம் கட்ட வேண்டும் என்று கூறுகின்றார்கள். கூட்டமைப்பினர் நினைத்திருந்தால் யுத்தத்தை நிறுத்தி, மக்களையும் பாதுகாத்திருக்கலாம், அதைவிடுத்து இப்போது நினைவுச் சின்னம் கட்ட வேண்டும் என்கிறார்கள். அவர்களுக்கு வெட்கம் இல்லையா? என அவர் கேள்வி யெழுப்பினார். (இ-7)

# கற்றல்வள நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சால் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான புதிய இரண்டு மாடி கற்றல்வள நிலையத் திறப்பு விழா நாளை மறுதினம் காலை 8.30 மணியளவில் நடைபெறும்.

அதிபர் திருமதி.புஸ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் மீது உப்பள நிறுவனத்தினர் பொய் முறைப்பாடு

## உறுப்பினர்கள் கண்டனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் மீது மறவன்புலவு உப்பள நிறுவனத்தினர் பொய்யான முறைப்பாடு ஒன்றைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ததாகக் கூறி சபை உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

உப்பள புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரதேச சபை எல்லைக்குட்பட்டவர்களுக்கே தொழில் முன்னுரிமை எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் தற்போது விசுவமடு, புளியம்பொக்கணை, தருமபுரம் மற்றும் ஆனையிறவு போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பணிகளுக்கு அமர்த்தப்பட்டனர்.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. உறுப்பினர் வை.ஜெகதாஸ் குறித்த உப்பள நிறுவனத்தினரிடம் நியாயம் கேட்டுள்ளார். அதற்காக அவர் மீது பொலிஸ் நிலையத்தில் பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்து முறைப்பாடு செய்தமைக்கு சபை உறுப்பினர்கள் தமது கண்டனத்தை வெளியிட்டனர். (இ-30)

# தாக்குதலில் காயமடைந்தவர்களை வாக்குமூலம் வழங்கக் கோரிக்கை


(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்களின் போது தற்கொலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியர் தேவாலயத்தில் காயமடைந்த 81 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

இதன்போது காயமடைந்ததாகக் கூறப்படும் மேலும் 7 பேரிடம் வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் இவ்வாறு வாக்கு மூலங்களை வழங்காமல் இருப்பவர்கள் 011 239 2900 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வாக்கு மூலங்களை வழங்க முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். (இ-7)

# நாட்டுக்கு வலிமையான தலைமைத்துவத்தை வழங்கக்கூடியவரையே நாங்கள் வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளோம்

## கோத்தாவுக்கு மகிந்த ஆதரவு கோரல்



(கொழும்பு)

**அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தம் இருக்கின்ற போதிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி இன்னமும் பலம் பொருந்தியதாகவே விளங்குகின்றது என்றும் அதன் அதிகாரங்களை முறையாகப் பயன்படுத்தி நாட்டுக்கு வலிமையான தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய ஒருவரையே நாங்கள் வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளோம் என முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தேயிலை, இறப்பர் சிறு பயிர்ச்செய்கையாளர்கள், ஏற்றுமதியாளர்களுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்த சந்திப்பு கொழும்பு இலங்கை கண்காட்சி மகாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பால் அதிகாரங்கள் குறைக்கப்பட்டாலும் கூட அதனால் துவண்டுவிடாமல் அர்ப்பணிப்பும் துணிச்சலும் கொண்ட ஒருவரால் நாட்டை முன்னோக்கி வழி நடத்த முடியும்.

எமது ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி செய்வதில் தனக்கு இருக்கும் ஆற்றலை ஏற்கனவே வெளிக்காட்டியிருக்கிறார்.

பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் அவர் செய்தவற்றை அடிப்படையாகக் கொண்டு அவருடைய ஆற்றல்க்ளை மதிப்பீடு செய்ய முடியும்.

அதனால் மாறுபட்ட சூழ்நிலைகளிலும் கூட நாட்டை அபிவிருத்தி செய்வதில் அவருக்கு இருக்கக்கூடிய ஆற்றல் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை.

நாட்டை சுபீட்சத்துக்கு வழிநடத்தக் கூடிய ஆற்றலுள்ள தலைவர் ஒருவரே எமக்குத் தேவை. அவ்வாறான ஆற்றல் கொண்ட ஒருவரே எமது வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

எனது அரசாங்கத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்து அவர் தனது ஆற்றல்களை வெளிக்காட்டியிருக்கிறார் என மகிந்த மேலும் தெரவித்தார். (இ-7)

## சபாநாயகரின் தலையீட்டால் வாக்கெடுப்பை நடத்தாது தப்பித்தது அரசாங்கம்!

(கொழும்பு)

ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சியினரும் வாக்கெடுப்பை நடத்தத் தயாரில்லை என அரசாங்கத் தரப்பினரும் நாடாளுமன்றில் கடும் வாதப் பிரதிவாதத்தில் ஈடுபட்டனர்.

ஆளும் தரப்பில் பெரும்பான்மை இல்லாத நிலையில் நீண்ட நேர கருத்து மோதலின் பின்னர் சபாநாயகரின் தலையீட்டால் வாக்கெடுப்பை நடத்தாது அரசாங்கம் தப்பித்தது.

அரசாங்கம் கொண்டுவரும் சட்டமூலம் ஒன்று குறித்து இன்னொரு நாளில் விவாதத்திற்கு எடுத்து வாக்கெடுப்பு நடத்தும் அதிகாரம் சபை முதல்வருக்கு உள்ளது. அதற்கமைய இன்னொரு நாளில் இந்த விவாதம் முன்னெடுக்கப்படும் என அறிவித்து சபாநாயகர் சபையை ஒத்தி வைத்தார். (இ-7)


### வேலையாட்கள் தேவை

பான்சி கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (104)

தொடர்புக்கு:- 075 359 0401



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# என்ரபிறைஸ் சிறிலங்கா

இலங்கை தொழில் நிறுவன மூன்றாவது தேசிய கண்காட்சி - யாழ்ப்பாணம்.

**செப்ரெம்பர் 07, 08, 09 மற்றும் 10 திகதிகளில் யாழ். முற்றவெளி மைதானத்தில் இலங்கை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் நடாத்தப்பட்வுள்ள மேற்படி கண்காட்சியில் இலங்கை மத்திய வங்கியின் காட்சிக்கூடத்தில் பின்வரும் சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.**

- புழக்கத்திற்கான நாணயக்குத்தி விநியோகம்
- வேண்டுமென்றே சேதமாக்கப்பட்ட மற்றும் பழுதடைந்த நாணயத்தாள் மாற்றம்
- ஊழிய சேமலாப நிதியம் தொடர்பான சேவைகள்
- இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனை
- இதர சேவைகள்



பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி,
இலங்கை மத்திய வங்கி.
தொலைபேசி இல.: 021-228-5914

## வீதிகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கரம்பைக்குறிச்சி வீதி, இடைக் குறிச்சி ஊரெல்லை வீதி என்பனவற்றின் திறப்பு விழா இன்று 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வரணி இடைக் குறிச்சி மேற்கில், நவா சனசமூக நிலையத் தலைவர் சி.சீவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-2-114)

## பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பருத்தித்துறை வீ.எம். வீதியில் அமைந்துள்ள “ஞானாலயத்தில்” கண் மற்றும் காதுக்கான இலவச பரிபூரண பரிசோதனை சேவை வடமாகாண ஓய்வு நிலை வங்கியாளர் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் “விஷன் கெயர்” நிறுவனத்தால் நடத்தப்படும். (இ-7)

# 3 மில்லியன் ரூபாய் செலவு தொடர்பில் யாழ்.மாநகரசபையில் வாதப்பிரதிவாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விற்காக யாழ்.மாநகர சபையால் செலவு செய்யப்படவுள்ள 30 இலட்சம் ரூபாய் சபை நிதி தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

2 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விற்கு 10 மில்லியன் ரூபாய் செலவு ஏற்படும் எனவும் அதில் 3 மில்லியன் (30 இலட்சம்) ரூபாய்களை எமது சபையைச் செலவு செய்யுமாறு நகரத் திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகள் கோரியதாக முதல்வர் சபைக்குத் தெரிவித்தார்.

இதன்போது சபையில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் செலவு தொடர்பில் சபைக்குத் தெரியப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதன் பிரகாரம் மாநகர சபைச் செயலாளரால் பின்வருமாறு செலவு விபரங்கள் விபரிக்கப்பட்டன.

அதில் நட்சத்திர விடுதியில் விருந்தினர்கள் 150 பேருக்கு உணவுக்காக ஒருவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய், மூவருக்கு நினைவுச் சின்னம் வழங்கல் 25 ஆயிரம் ரூபாய், பத்திரிகை விளம்பரம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய், வரவேற்பு நடனச் செலவு 15 ஆயிரம் ரூபாய், பரிசுப் பொருட்கள் 6 ஆயிரம் ரூபாய், குடிநீர்ப் போத்தல்களுக்கு 36 ஆயிரம் ரூபாய், கொடிகள் கட்ட 20 ஆயிரம் ரூபாய், ரோக்கன் 25 ஆயிரம் ரூபாய் மற்றும் மேடைச் செலவுகளுக்காக 16 இலட்சம் ரூபாய் என செலவுத் தொகையை சபைக்குச் செயலாளர் விபரித்தார். (இ-10)

# சுகாதாரத் தொண்டர்கள் நியமனம் குறித்து வடமாகாண சுகாதார அமைச்சு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றுபவர்களில் இருந்து சுகாதாரப்பணி உதவியாளர் (கனிஷ்டம்) தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளுக்கு வடமாகாண சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் செ.பிரணவநாதன் விளக்கமளித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், வடமாகாண சுகாதாரச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணியான சுகாதாரப் பணி உதவியாளர் (கனிஷ்டம்) தரத்தில் 2018.07.01 ஆம் திகதியன்று சுமார் 454 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதனை நிரப்பும் முகமாக போர்க்காலச் சூழலில் மனிதவளப் பற்றாக்குறை நிலவிய காலத்தில் வடமாகாணத்திலுள்ள அரச சுகாதார நிறுவனங்களில் சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றுபவர்களிலிருந்து குறித்த பதவிக்குப் பொருத்தமானவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் வடமாகாண சுகாதார அமைச்சால் ஒவ்வொரு மாவட்டங்களில்தனித்தனியாகநடத்தப்பட்டன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையானவர்களாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய சுமார் 1,676 பேரும் வைத்தியசாலைகளில் நிலவி வந்த ஆண் ஊழியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் செயற்கை அவயவங்கள் தயாரிக்கும் அலகின் தேவைக்காகவும் வெளிவாரி அடிப்படையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினூடாக சேவைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட 136 பேரும் கொள்ளப்பட்டனர்.

வைத்தியசாலைகளில் காணப்பட்டு வரும் தேவைகளைக் கருத்திற்கொண்டு மொத்த வெற்றிடத்தில் ஆகக்குறைந்தது 30 வீத ஆண்களை ஆட்சேர்ப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அத்துடன் ஆளுநரின் விசேட அனுமதியின் பேரில் இப்பதவிக்கான ஆளணியினரைத் தெரிவு செய்வதற்கான அடிப்படை கல்வித் தகைமையாக தரம் 08 இல் சித்தி கொள்ளப்பட்டதுடன் உச்ச வயதெல்லையாக 50 கொள்ளப்பட்டது. மேலும் மொத்த வெற்றிடத்தில் 3 வீதம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேலும் சுகாதாரத் தொண்டர் அல்லது வெளிவாரி அடிப்படையில் சேவை புரிந்த காலப் பகுதியின் ஆண்டு ஒன்றுக்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 55 புள்ளிகளும் கல்வித் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகளுக்கு ஆகக் கூடியது 40 புள்ளிகளும் நேர்முகப் பரீட்சையின்போது தோற்றுகின்ற பரீட்சார்த்திகளின் செயலாற்றுகைக்காக 5 புள்ளிகளுமாக மொத்தம் 100 புள்ளிகள் வழங்குவதான புள்ளியிடல் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த திட்டத்தினடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு உயர்ப்படி ஒழுங்கில் (Merit Order) பொதுவான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு சுகாதாரப்பணி உதவியாளர் பதவிக்கு பொருத்தமான 454 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவ்வாறாக தெரிவு செய்யப்பட்டவர்களில் 23 மாற்றுத்திறனாளிகளும் 8 பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பத்தினரும் அடங்கியுள்ளனர். அத்துடன் தற்போது குறித்த 454 பேருக்கும் நியமனங்கள் வழங்கக்கூடிய ஆயத்த நிலையிலுள்ளதுடன் நடைபெற்று முடிந்த நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படாதவர்களின் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பத்தினருக்கும் உரிய தகைமையுடையோருக்கும் எதிர்காலங்களில் இடம்பெறும் நியமனங்களின்போது ஆளுநரின் விசேட அனுமதியுடன் முன்னுரிமை வழங்குவதெனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மேலும் விளக்கமளிக்கப்பட்டது. (இ-7)

## மஹா கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர்-சிதம்பராமூர்த்தி-கேணியடி ஞானவைரவப் பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.35 மணியளவில் இடம்பெறவுள்ளது. (இ-2)

## நூலகத்திற்கு முன் கழிவுகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பொது நூலகத்துக்கு முன்னால் தொடர்ச்சியாக இரவு நேரங்களில் கழிவுகள் வீசப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர்.

வலி.தெற்கு பிரதேச சபைக் குட்பட்ட குறித்த பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெறும் இச் செயற்பாட்டால் அருகிலுள்ள பாடசாலைச் சமூகத்தினரும் அசௌகரியங்களுக்கு உள்ளவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் உரிய தரப்பினர் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-10)

## இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகினி

ராகு

சூரி, புத செவ், சுக்

சனி, கேது

குரு, சந்

07.09.2019

ஆவணி 21, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.6 மணிக்கு

நவமி பின்னிரவு 2.13 மணிவரை

கேட்டை முற்பகல் 10.48 மணிவரை

சுபநேரம் 3.04 - 4.34 மணிவரை

இராகுகாலம் 9.04-10.34 மணிவரை

ஆவணி மூலம்

வளவன்

**மீனம்** – மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்** – தேவையற்ற அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**இடபம்** – அல்லல்கள் தீர அனுமனை வழிபட வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, முக்கியமான பொறுப்புக்களை நிதானத்துடன் கையாள வேண்டிய நாள்.

**மிதுனம்** – விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** – மனம் குளிரும் வகையில் செய் திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** – பகையொன்று நட்பாகலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், எடுத்த காரியங்களில் தன்னம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள், கடன்களை வசூலிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மகரம்** – குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** – சோம்பலை விலக்குவது நல்லது, எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்** – நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பணப்புழக்கம் கூடும் நாள்.

**துலாம்** – சகோதர வழியில் எதிப்பார்ப்புகள் நிறைவேறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** – கடன் சுமை குறையும் நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தாய்வழி உறவில் எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

# 'பௌராணிகவித்தகர்' சிவஸ்ரீ வயித்திலிங்கம் குமாரசுவாமிக்குருக்கள்

# அவர்களின் நூற்றாண்டு ஜனன தின விழாவும் 'குமாரதீபம்' மலர் வெளியீடும் (1919-2019)

## ஆசியுரை



கொல்லங்கலட்டி விநாயகர் ஆலயத்தை சேர்ந்த சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவரது நூற்றாண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற வேண்டுமென விநாயகப் பெருமானையும் நகுலேஸ்வரப் பெருமானையும் பிரார்த்திக்கின்றேன்.

அன்னார் நகுலேஸ்வர ஆலயத்தில் புராணபடனத்திற்கு பயன் சொல்வது மிகவும் சிறப்பாக இருந்தது. முக்கியமாக நகுலேஸ்வரர் ஆலயத்தின் 12 ஆம் நாள் நடைபெறும் திருக்கைலாய திருவிழாவில் கலந்து கொண்டு தவசு இருக்கும் படலத்திற்கு உரை சொல்வது வெகு சிறப்பாக இருக்கும். அந்தக் காலத்தில் கொல்லங்கலட்டி விநாயகப் பெருமான் ஆலயத்தின் ஆதீன கர்த்தாவாகவும் பூசகராகவும் இருந்து மிகவும் சிறப்பாக நடத்தி வந்தவர். படிப்புத் தன்மை, வித்துவத் தன்மை, பூசை ஒழுங்குகள் தவறாமல் செய்யும் தன்மையுடைய அடியவர். ஆகவே அவருக்கு இந்த நூற்றாண்டில் ஊர் மக்களும் ஆலயத்தைச் சேர்ந்தவர்களும் பக்தர்கள் அனைவரும் சேர்ந்து அவருக்கு விழா எடுப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்னார் சிவபதமடைந்த நன்னாள் திங்கட்கிழமை பங்குனி சங்கட சதுர்த்தி பூரண நாளாகும். ஆகவே அவர் ஆத்மா சிவசாந்தி அடைந்துவிட்டது. நூற்றாண்டு விழாவை சிறப்பிப்பதற்கு எல்லோருக்கும் நகுலேஸ்வரப் பெருமானின் ஆசி உண்டாகுக.

ஓம் சாந்தி

**சிவஸ்ரீ. கு.நகுலேஸ்வரக்குருக்கள், ஆதீனகர்த்தா,**
**நகுலேஸ்வரம், கீரிமலை**

## அருளாசிச் செய்தி



அன்புள்ளவர்களுக்கு!

திரு.சிவஸ்ரீ (குமார சுவாமிக்குருக்களின்) சேவைகளைப் பாராட்டி நூல் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். புராணிகராக, ஆலயப் பூசகராக நிறைவான கடமைகளை ஆற்றிபலரது நன்மதிப்பைப் பெற்ற குருக்களுடைய சேவை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. வித்துவ சிரோன்மணி கணேசையாவின் மாணவனாக பல நூல்களை ஆராய்ந்து குறிப்பைக் கூறக் கூடிய ஆற்றல் உடையவர்கள் பல அறிவுகளைப் பெற்று இன்று இவருடைய பணி களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் கொல்லங் கலட்டி மக்கள் சிறப்புச் செய்வது சிறப்பிற்குரியதாகும். சிறப்புச் செய்யும் அன்பர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நல்லை ஆதீனம்**

## அருளாசிச் செய்தி



சமயங்கள் ஒவ்வொன்றும் மனிதனை நல்வழிப் படுத்தும் போதனைகளைத்தான் சொல்லி வருகின்றன. அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்வதில்லை. ஏனெனில் கடவுள் சகல ஆன்மாக்களிலும் அன்பாய் இருக்கிறார். அன்பே சிவம் என திருமூலர் நாயனார் அருளிய வாக்குப்படி, வரணி கரணவாய் குரு பரம்பரைக்கும் கொல்லங்கலட்டி வீரகத்தி பிள்ளையார் கோவில் பரம்பரை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ வைத்தியலிங்கம் குமாரசுவாமி குருக்கள் அவர்கட்கும் ஆரம்ப காலத்தில் இருந்தே கல்வித்தொடர்பும், சமயக்கிரியைகள் தொடர்பும் மிக நெருக்கமாக இருந்தது. ஐயா அவர்கள் சமயக் குருவாகவும், சமய வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். அவரின் நினைவாக விழா அமைத்து மக்கள் மனதில் நிறுத்தி நினைவு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். "அவரின் வழியில் குருக்களும் பொதுமக்களும் பின்பற்ற வேண்டும்" என ஆசீர்வதிக்கிறேன்.

**செ.கைலாசநாதக்குருக்கள்,**
**கரணவாய் மூத்த விநாயகர் கோயில்,**
**வரணி கரணவாய் வேதாரணியம்**
**ஆதீன பரம்பரை தர்மகர்த்தா.**

## வாழ்த்துச் செய்தி



எமது காலத்தில் வாழ்ந்த மாவை கொல்லங் கலட்டி ''பௌராணிகவித்தகர்'' சிவஸ்ரீ வயித்திலிங்கம் குமார சுவாமிக்குருக்களவர்கள் பரம்பரைச் சைவர். இவரின் முன்னோர்கள் செய்த சிவாலய சேவையின் பயனாக சென்ற நூற்றாண்டிலே (1919-1995) இம்மண்ணிலே அவதரித்து அரை நூற்றாண்டுக்கு மேல் நைட்டிகப் பிரமச்சரிய ஒழுக்கத்தினை மேற்கொண்டு பக்தியுடன் இணைந்ததான சிவத்தொண்டினைப்புரிந்து மேனிலை பெற்ற ஒருவராகத் தெரிகின்றார். ''சிவத்தொண்டு'' என்று இங்கு நாம் குறிப்பிடுவது இவரால் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஆலயக் கிரியைகளையும் புராணபடனப் பணியினையுமேயாகும்.


இவை இரண்டிலும் இழையோடிநின்றது எமது சைவத்தமிழ்ச் சமூகத்தின் மீதான அக்கறையேயாகும். இவரின் சிவபூசைக்கான களமாக அமைந்தது மகிமை பெற்ற மாருதப்புரவீகவல்லியால் கொல்லங்கலட்டியிலே பிரதிஷ்டை செய்து வழிபடப் பெற்ற வீரகத்தி விநாயகர் ஆலயமாகும். இன்று பல சைவாலயங்களிலே பலர் நடப்பது போல "கோயிற்பூனை தேவருக்கும் அஞ்சாது" என்றபடி குருக்கள் தமது ஆலயத்தில் நடந்து கொண்டதில்லை. மதத்தை அடக்கிப் பணிபுரிதலே ஆலயத் தொண்டரின் முதற்கைங்கரியமாக இருக்க வேண்டுமென்பதிலே குருக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். இவர் காலத்திலே வாழ்ந்த சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் (1878-1953) அவர்கள் தமது வாழ்நாளின் பிற்பகுதியில் கந்தவனக் கடவை சுப்பிரமணியர் ஆலயத்தினருகே தவச்சாலை அமைத்து அக்கோயிலிலே சரீரத் தொண்டாற்றி வழிபாடு செய்தார். குருக்களும் ஆலயத்தருகேயிருந்த தமது இல்லத்திலிருந்து சென்று சரியைத் தொண்டாளராகவும் மாறி கிரியைத் தொண்டாற்றியமையினைக் குருக்கள் தொடர்பாக குருக்களவர்களின் பெறாமகளான திருமதி சிவை.குகநேசன் அவர்கள் எழுதிய கட்டுரையினைப் படித்து அறிந்து கொள்ளலாம்.

அடுத்து, ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்'' என்று மாணிவாசகப் பெருமான் கூறியதனை நடைமுறைவழிபாட்டிற்குக் கொண்டுவரும் வகையில் இவரின் புராணபடனப் பணி அமைந்திருக்கிறது. இந்தப் புராண படனப்பணி சமய அறிவினைப் புகட்டும் சாதனமாக மட்டுமன்றி முத்திக்குரிய சாதனமாகவும் விளங்குகின்றதென்று நாவலர் பெருமான் குறிப்பிட்டுள்ளார்.

குருக்கள் காலத்திலே வாழ்ந்த அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமார சுவாமிக்குருக்கள், நீர்வேலி சிவஸ்ரீ சு.இராசேந்திரக் குருக்கள் முதலானோரைப்போல சிவபூசையுடன் சைவக்கல்விப் பணியான புராணபடனப் பணியினையும் தமது இறுதிக்காலம் வரையும் மேற்கொண்டு நாவலர் பெருமானின் மரபில் இடம்பிடித்துக்கொண்ட ஒருவராக குருக்களவர்கள் விளங்குகின்றார். இவர்வாழ்வு சுவாமி விவேகானந்தர் தெய்வங்கள் ஆகுங்கள் பிறரைத் தெய்வங்கள் ஆக்குங்கள் என்று கேட்டுக் கொண்டதற்குப் பதிலாக அமைந்திருக்கிறது.

விருதுகளினால் பலர் பெருமை பெறுவதுமுண்டு. சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோயிலிலே வைத்து குருக் களுக்குரிய பௌராணிகவித்தகர் எனும் விருதினை வழங்கியதால் அவ்வாலய பரிபாலனசபையும் பெருமை பெற்றது. இவ்வகையில் குமாரசுவாமிக்குருக்களவர்களின் நூற்றாண்டுவிழாவின் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களும் ''குமாரதீபம்'' எனும் மலரினை ஆக்கி வெளியிடுபவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

**முருகேசு கௌரிகாந்தன்,**
**ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்**



**சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில்**
**கந்தபுராணப் படிப்புப் பூர்த்தி விழாவன்று- 29.01.1994**

உரையாசிரியரும் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில்
ஆதீனகர்த்தாவும் பிராசீன பாடசாலையில் படித்தவரும்
வித்துவசிரோன்மணி கணேசையரின் மாணவருமான

**சிவஸ்ரீவயித்திலிங்கம் குமாரசுவாமிக்குருக்கள்**
அவர்களுக்கு கோவில் பரிபாலன சபை
மனமுவந்து வழங்கிய

## வாழ்த்துப்பா

**திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்**
**சகட சக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர விண்மணி யாவுறை**
**விகட சக்கரன் மெய்ப்பாதம் போற்றுவாம்.**

இடம் பெயர்ந் திங்கு குடி புகுந்து
உடனிருக்கும் உத்தம குமாரசுவாமிக் குருவே
குடநிறை தண்ணீர் தளம்பாது போல
துடமான உரைகூறும் திருமகனே நீவாழ்க.

பொன்னான மாவிட்டபுரமாம் புகழ்பூத்த கொல்லங்கலட்டியில்
நன்னாளாய் ஆவணிமூலமதில் அவதரித்து
எந்நாளும் சிவனை சிந்தையில் கொண்ட
மன்னவநீ சுழிபுரம் வந்தது எம்வாய்ப்பையா.

ஐந்து கரமுடைய வீரகத்தி பிள்ளையாரை
சிந்தையி லிருத்திச் சிறந்த பணிபுரிந்த
கந்தவேள் நாமமுடைய பிரம்மச்சாரிய குருவே
எந்தையில் வைத்து உமையென்றும் ஏத்துவோம்.

அன்பெனும் சொல்லுக்கு அடையாளமாய் வாழும்
துன்பம் யார்க்கும் துகின்றறியாத் தூயவனே
இன்பம் பொங்கும் இனிய குருவாய்
எங்கள் இதயம் வாழ்வாய்.

விண்ணிலே வாழும் தேவரை போலவுன்
கண்ணிலே ஞான ஒளியைக் கண்டோம்
மண்ணிலே நல்கிய மருந்து போன்ற
எண்ணரிய போதனைகள் எம்மனதை விட்டகலாதையா

துன்னாலைத் திடர்செய்யும் துன்பவழி செல்லாமல்
உன்னுடைய விரிவுரையால் உய்யும்வழி காட்டி
குன்றிலாடும் குமரனை மறவாதுகும்பிட வைத்த
உன்னை வணங்கமுன் எத்தவம் செய்தோமையா.

ஈட்டிய தவப்பயன் அல்லாத எங்கள்
நாட்டமுடைய நற கடவுட் பக்தராக்க
காட்ட அனல்போல் எம்முடன் கலந்து
ஆட்டும் நட்டுவன் எம்மண்ணல் நீரல்லவோ.
முந்தய வினையின் முருகன் அருளினால்
கந்தவேளின் கந்தபுராணத்தை காதலித்து நீரும்
சொந்த புராணமாய்ச் சுவையுடன் ஓதும்
விந்தை நிறைந்த வித்தகக் களஞ்சியமானாய்.

பண்பாக எம்முடன் பழகியவிதத்தைப் போற்றுகிறோம்
நண்பனாய் நல்லாசானாய் நற்போதனைகள் தந்து
விண்ணவர் புகழ் புராணவித்தகனாய் கலந்தாய்
உண்மையாய் உமதுசேவையை யாமொன்றும் மறவோம்.
நீறு பூத்த நெற்றியழகும்
மாறுபடா சொல் வன்மையும்
வேறு தியானம் விரும்பாத உத்தமனாய்
ஏறுடை ஈசனை ஏத்தும் ஏந்தலே நீவாழ்க.

அருளொழுகும் கண்களும் அன்பும் ஞானமும்
கருணைப் பொழிவும் கவரும் தன்மையும்
மருவுதேவ அச்சம் பொருந்திய குருவாய்
திருவவதாரம் செய்த தேவனே நீ வாழ்க.

ஈஸ்வர சேவையை இன்பமாய்க் கருதி
விஸ்வாசத்துடன் பூசை செய்து வந்தாய்
கஷ்டாங்கள் பல கண்டும் கடுகளவும் கலங்காது
புஸ்பம் சாத்த என்றும் மறவாப் புண்ணியனே நீவாழ்க
மண்ணுலகில் இலைமறை காயாய் வாழும்
புண்ணிய புராண விரிவுரையாளராய் விளங்குமுமக்கு
விண்ணவர் போற்றும் "பௌராணிகவித்தகர்" எனும்
பண்பாக பலரும் போற்றப் பரிபாலன

(பட்டத்தை சபை வழங்குகிறது)

பல்லாண்டு பல்லாண்டு காலம்பலரும் போற்றிட
நல்லரிய ஈஸ்வர சேவை நலமுடன் செய்து
சொல்லரிய பௌராணிகவித்தகராய் சுகமுடன்
எல்லோரும் போற்ற விறையருளுடன்..

(வாழ்ந்து வாழிய வாழியவே)

**பரிபாலனசபை , ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோயில், சுழிபுரம்**

(102)

## ஆசியுரை

20.03.1995 ஆம் ஆண்டு சிவபதமடைந்த சிவஸ்ரீ வைத்திலிங்கம் குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் உரை ஆசிரியராகவும் கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில் ஆதீனகர்த்தாவும் வித்துவ சிரோன்மணி கணேசையர் அவர்களின் மாணவ னும் ஆவார். கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலை தனது காலத்தில் சிறப்புற நடாத்தி வந்ததுடன் மாவைக் கந்தன் ஆல யத்திலும் மேலும் பல ஆலயங்களிலும் சகல புராணங்களும் படித்து பயன் சொல்லி சமயங்களை வளர்த்து பொது மக்களின் மனதிலே நீங்காத நினைவு கொண்டுள்ளார். அன்னாரை எல்லோரும் நினைவில் கொண்டு அவர் செய்த சமயத் தொண்டுகளைப் பாராட்டி சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலால் 1994ஆம் ஆண்டு "பௌராணிக வித்தகர்" எனும் பட்டம் வழங்கப்பட்டது. 07.09.2019 ஆம் ஆண்டு நடைபெறும் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா நடை பெறுவதையிட்டு மாவை ஆதீனம் பெருமகிழ்ச்சி அடைகிறது. விழா குழுவினருக்கும் எனது ஆசீர்வாதங்கள்.

**மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசுவாமிக்குருக்கள்.**
**ஆதீனகர்த்தா**

## நினைவலைகள்

யாழ்ப்பாண மாவட்ட தெல்லிப்பழையை அடு த்த கொல்லங்கலட்டியில் வேண்டுவோர்க்கு வேண்டு வதை வழங்கியருளும் அருள்மிகு வீரகத்தி பிள்ளையார் ஆலயத்தில் நித்திய பூஜைகளை சிவஸ்ரீ வ.குமாரசாமி குருக்களும் அவர்தம் உடன் பிறந்தவர்களும் மிகவும் நேர்த்தியாகவும் அர்ப்பணிப்புடன் பணிபுரிவது யாவரும் அறிந்ததே. அதேவேளை சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் வரணி ஆதீனத்துடன் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் அதிலும் குறிப்பாக எமது தந்தையார் ஸ்ரீலஸ்ரீ ச.கதிர்காமபண்டார சன்னதி அவர் களுடன் மிகுந்த மானசீகமாக விசுவாசம் கொண்டவராகும்.

மேலும் எமது வீட்டு வழிபாட்டுக்கு குலதெய்வ உருவவழி கொடுத்து வழிவகை செய்த செயற்கரிய செயல் என்றென்றும் மறக்க முடியாது. அதேவேளை அன்னாருடைய இழப்பு வேதனையளிக்கக் கூடியது என்றாலும் அன்னாருடைய ஆன்மா இறைவன் திருவடியில் வாழ்வாங்கு வாழ்வார் என்பது திண்ணம்.

**க.செவ்வந்திநாதக் குருக்கள்**

## ஆசியுரை



மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமான் அவதாரபுருசன் அமரர் சிவஸ்ரீ வைத்தியலிங்கம் குமாரசுவாமி குருக்கள் ஐயா அவர்கள்.

இலங்கை யாழ்ப்பாண மாவட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவின் கொல்லங்கலட்டியில் கோயில் கொண்ட ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயம் அநாதியானதும் தெய்வீகம் நிறைந்ததும் ஆகும். யாழ்ப்பாண மாவட்டமானது பாதுகாப்பு பிரிவினரால் நடாத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது ஆலய வளாகத்தில் தஞ்சமடைந்திருந்த அடியார்களின் மடியில் படுத்திருந்த பெண் குழந்தை பெற்ற தாய் குண்டு பட்டு மரணிக்கும் தறுவாயில் குழந்தையைப் பாதுகாக்கும் வகையில் பிள்ளையில் தாக்கம் இல்லாமல் காப்பாற்றப் பட்டது ஸ்ரீவீரகத்தி விநாயகரின் அருட்கடாட்சமேயாகும்.

குழந்தையின் தந்தை சிவஸ்ரீ தி.கோடீஸ்வர குருக்கள் ஐயா கல்விக் கொள்கைகளை ஏற்படுத்தி மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பயின்று பொறியியலாளராக ஆக்கிவிட்டார். நன்றியுடையோம். சைவமும் தமிழும் தங்கள் இருகண்கள் எனப் பேணிப் பாதுகாத்து வரும் உயர்சைவ வேளாண்மையாளர்கள் தொடர்ந்து ஊர் மக்களும் தவறாது வழிபாடு செய்யும் கோயிலாகும்.

பக்த அடியார்களுக்கு பொன்னும், மெய்ப்பொருளும், போகமும், திருவும் வழங்குபவராய் எம்பெருமான் காட்சியளிக்கிறார். கிழக்கு திசையில் உதயசூரியன் தோன்றிய மாதிரி உயர்ஸ்ரீ வைத்தியலிங்கம் ஐயா அவர்கட்கு அமரர் சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் ஐயா பூர்வபுண்ணியத்தில் அவதரித்தார்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள் மூதறிஞர்கள். வெகுஅண்மையில் அவர்கள் குடியிருப்புகள் அமையாதன்மையால் பிள்ளைப்பராயத்தில் வீடுதான் ஆலயமோ? ஆலயம் தான் வீடா? என்ற ஐயம் ஏற்பட்டது. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அவதாரபுருசர் வளர்ச்சியடைந்தார். பெற்றோர்கள் பிள்ளையின் கல்வியை பிராசீன பாடசாலையிலும் வித்துவ சிரோமணி ஸ்ரீகணேசய்யா அவர்களிடமும் பயிற்றுவித்தனர். தமிழ், சைவம், சமஸ்கிருதத்தில் அதீத திறமையுடயவராய் காணப்பட்டார்.

குருக்கள் ஐயா சிவபூசை கைங்கரியங்கள் பூர்த்தியானதும் எல்லாம்வல்ல ஸ்ரீவீரகத்தி விநாயகப்பெருமானை ஆராதிக்கத் தேவையான ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்தி அபிடேகம், ஆராதனைகள் செய்து நித்தியபூசை கடமைகளை ஆரம்பித்தார். அவ் வழிபாட்டின் போது "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக நேயமே நெய்யும் பாலாநிறைய நீராட்டி"பூசனையை மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் பெருமானுக்கு ஆற்றுவார். திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும் கருணைபூக்கவும் தீமையை காய்க்கவும் பருவாய் நமதுள்ளம் பழுக்கவும் எல்லாம்வல்ல எம்பெருமான் மீது வேண்டுதல் செய்வார். கல்வி கேள்விகளில் தலைசிறந்த ஐயா புராணபடலங்களுக்கு உரை சொல்வதிலும் வல்லவர். பௌராணிகவித்தகர் எனும் பட்டத்தை பெற்றவர்.

**ஸ்ரீலஸ்ரீ க.மாணிக்கவாசகர், தலைவர்,**
**யாழ்ப்பாணம் வரணி ஆதீனசபை.**

## நன்றியுடன் நினைவுகூரல்



மானிடப்பிறவி அரிதானது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு கலைகள் பிரதானமானவை. அதில் முதன்மையானது இசையாகும். பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இலக்கியங்களே எமது இசைக்கு அடிப்படையானவை ஆகும். இக் காலத்தில் தோற்றம் பெற்றவையே புராணங்கள் ஆகும். புராணக் கதையின் ''ரஸ'' வெளிப் பாட்டுக்கு அமைய அப்பொழுது பண்கள் என்றும் தற்காலத்தில் அதற்கு ஒப்பான இராகங்கள் என்றும் பயன்படுத்தப்படுகின்றன. புராணப் படிப்பின் போது பாடல்களையும், பயன்கூறுவதையும் அழகான குரலில் பொருத்தமான இராகங்களைக் கையாளு வதில் வல்லவராகத் திகழ்ந்தவர் பௌராணிக வித்தகர் சிவஸ்ரீ வயித்திலிங்கம் குமார சுவாமிக் குருக்களாவர். பக்தி இலக்கியங்களூடாக சமயத்தை வளர்த்தெடுக்கலாம் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர். புராணபடனத்தை அழகாகப் பாடியும் பயன் சொல்லியும் கதைகளை விளக்கமாக மக்களால் உணர முடிந்தமையால் சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலய சமூகத்தினரால் பௌராணிக வித்தகர் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது புராணபடன தொடர்பாலே ஆலயத்தில் இசையோடு ஆன்மீகமும் வளர்ச்சியடைந்தது. அவரது ஜனன தினமான ஆவணிமூல நூற்றாண்டினிலே நினைவு கூருவதில் பெருமிதம் அடைகின்றேன்.

**கலைக்குரிசில் திருமதி. சி.வை.குகநேசன், பணிப்பாளர்,**
**உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகம், இசைத்துறை விரிவுரையாளர்,**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி**

## முன்பள்ளி கட்டடம் திறந்து வைப்பு



(குருமன்காடு)

முன்பள்ளி சிறார்களின் ஆரம்பக் கல்வி மற்றும் ஆளுமை விருத்தியினை கட்டியெழுப்புவதற்காக புதிய கட்டடம் மற்றும் பூங்கா கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலகவின் நிதியின் மூலம் வவுனியா கணேசபுரம் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்ட விவேகானந்தா முன்பள்ளி கட்டடமே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன், சிறுவர்களுக்கான சிறுவர் பூங்காவும் திறந்து வைக்கப்பட்டதுடன், முன்பள்ளி சுற்று வேலிக்கான அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக, அமைச்சரின் இணைப்பு செயலாளர் அல் ஹாஜ் முத்து முகமட், நகர சபை உறுப்பினர் நகர இணைப்பாளர் அப்துல் பாரி, நகர சபை உறுப்பினர் ஏ.ஆர். எம்.லரீப், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜோர்ஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-250)




### மீள்குடியேறி 10 வருடங்களாகி புறக்கணிப்பு

# ஆடம்பரம் இல்லை அடிப்படை வசதிகளையே கேட்கிறோம்

## பூநகரி பல்லவராயன்கட்டு சோலை கிராம மக்கள் ஆதங்கம்



(மன்னார்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பல்லவராயன் கட்டு சோலை கிராமத்தை சேர்ந்த மக்கள் மீள் குடியேறி பத்து வருடங்கள் ஆகியும் இதுவரை தாங்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அவதியுறுவதாகவும் அரச அதிகாரிகள் தொடர்ச்சியாக பாராமுகமாக செயற்படுவதாகவும் மெசிடோ நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் கருத்து கேட்கும் நிகழ்ச்சி திட்டத்தில் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பல்லவராயன் கட்டு சோலை கிராமத்தை சேர்ந்த மக்கள் யுத்தகாலப்பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக தங்களுடைய சொந்த கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு தற்காலிகமாக ஆனைவிழுந்தான், ஸ்கந்தபுரம், கோணாவில், முறிப்பு, விஸ்வமடு இருட்டுமடு எனும் பல்வேறு பகுதிகளில் கட்டாயத்தின் பேரில் இடம் பெயர்ந்து ஒவ்வொரு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த பகுதி மக்கள் அவர்களின் சொந்த நிலங்களில் மீள் குடியேற்றப்பட்டனர்.

ஆனால் மீள்குடியேறி 10 வருடங்கள் கடந்தும் பல்லவராயன் கட்டு மக்கள் அடிப்படை வசதிகள் கூட பூர்த்தி செய்யப்படாமல் ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் இன்றி அன்றாட வாழ்வாதாரத்திற்கே கஷ்டப்படும் நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அதே போன்று இதுவரை குறித்த மக்களுக்கான ஒழுங்கான போக்குவரத்து வசதிகளோ சுகாதார வசதிகளோ அரசாங்கத்தினால் செய்து தரப்படவில்லை எனவும் அதே நேரத்தில் தரம் 5 ஆம் ஆண்டு வரை மாத்திரமே பாடசாலை காணப்படுவதால் 5 ஆம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் 10 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரம் காட்டு பாதைகளினால் பயணித்தே பாடசாலைக்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாக பல்லவராயன் கட்டு மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

அதே நேரத்தில் இரவு நேரங்களில் யானைகளின் தொல்லைகள்கூட அதிகமாக காணப்படுவதால் தங்களால் பயிர்ச்செய்கை மற்றும் வீட்டுத்தோட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு தங்களுக்கு ஆடம்பர வசதிகளை செய்து தராவிட்டாலும் அடிப்படை வசதிகளான ஆரம்ப சுகாதார நிலையம்,வீதிகள் போக்குவரத்து போன்ற பொதுவான வசதிகளையாவது செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-285)

## இலவச சிங்கள மொழிப்பயிற்சி

(மன்னார்)

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொழிற்பயிற்சி நிலையமும் மன்னார் மாவட்ட செயலகமும் இணைந்து 12 நாட்களைக் கொண்ட இலவசசிங்கள மொழிப்பயிற்சிநடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மொழி பயிற்சியில் ஆர்வமுள்ள இளைஞர்கள்,யுவதிகள் இணைந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குறித்த பயிற்சிக்கு பயிற்சியாளர்கள் தொகை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் பயில விரும்பும் இளைஞர்கள்,யுவதிகளின் விபரங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முழுமையாக பயிற்சியினை பூர்த்தி செய்யும் நபர்களுக்கு தேசிய ரீதியில் அங்கீகரிக்கப் பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலதிக விபரங்களுக்கு 077 690 6590/ 023-225 13116 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9-285)

## ஊடகவியலாளரிடம் விசாரணை

(நெளுக்குளம்)

பளை வைத்திய அதிகாரி சிவரூபன் தொடர்பான தகவல்களை வவுனியாவிலுள்ள சிங்கள பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் தினசேன ரத்துகமகவினால் அனுப்பி வைக்கப்பட்ட செய்தி கடந்த 29.08. 2019 திகதி வெளியானதன் பின்னர் செய்தி தொடர்பாக விசாரணை மேற் கொள்வதற்காகவும் அச் செய்தியினால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து விசாரணை மேற்கொள்வதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் அழைப்பாணை பெறப்பட்டு கொழும்பு பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டு 6மணி நேர விசாரணைகளின் பின்னர் குறித்த ஊடகவியலாளர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களப்பத்திரிகைக்கு வவுனியாவிலுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளரால் பளை வைத்திய அதிகாரி சிவரூபன், கோத்தபாயவை கொலை செய்யத்திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்தி குறித்தும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதாகவும், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து சுமார் ஆறுமணி நேர விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சிரேஷ்ட ஊடகவியலாளர் மேலும்தெரிவித்துள்ளார். (9-299)

# மன்.டிப்பர் உரிமையாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டிப்பர் வாகனங்களை வைத்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருபவர்களை ஒன்றிணைத்து டிப்பர் உரிமையாளர் சங்கம் ஒன்றை உருவாக்க மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட டிப்பர் வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் டிப்பர் வாகனங்களை வைத்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாகன உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் அவசர கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், பிரதேசச் செயலாளர்கள்,பிரதேச சபைகளின் தவிசாளர்கள், வன வள திணைக்கள அதிகாரிகள், மாவட்ட சுற்றுச்சூழல் உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர்கள், மற்றும் தொடர்புபட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள்,மன்னார் மாவட்ட டிப்பர் வாகன உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக மன்னார் மாவட்ட டிப்பர் வாகன உரிமையாளர்களை ஒன்றிணைத்து சங்கம் ஒன்று அமைப்பது எனவும், எதிர்வரும் காலங்களில் இச்சங்கத்தின் ஊடாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும், மன்னாரில் மண் அகழ்வுகளை அந்தந்தப் பிரதேசங்களில் இயங்கும் சமாசங்களின் ஊடாக மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எனவே அதனைக் கருத்தில் கொண்டு மன்னார் மாவட்ட டிப்பர் உரிமையாளர்களுக்கான சங்கம் ஒன்றினை அமைக்கும் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் மன்னார் வை.எம். சி.ஏ. மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த கூட்டத்திற்கு டிப்பர் வாகன உரிமையாளர்கள் கலந்து கொள்ளுமாறு ஒழுங்கமைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(9-285)

# சுதந்திரபுரத்திலுள்ள தனது 20 ஏக்கர் காணியை மக்களுக்கு பகிர்ந்தளித்தார் ஆனந்தசங்கரி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்குச் சொந்தமான காணியையே மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த காணியில் 1988ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியிலிருந்து சுமார் 20 குடும்பங்களிற்கு மேல் வாழ்ந்து வருகின்றனர். எனினும், குறித்த காணியின் உரிமம் அவர்களிற்கு கிடைக்காமையால் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

குறித்த காணியில் மக்கள் குடியிருக்கின்றமையை அறிந்த வீ.ஆனந்தசங்கரி இதுவரை குறித்த காணியை மீளப் பெற்றுத் தருமாறு அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருக்கவில்லை. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை குறித்த காணியில் குடியமர்ந்துள்ள மக்கள் வீ. ஆனந்தசங்கரியை சந்தித்து பாதிக்கப்பட்ட தமக்கு பகிர்ந்தளிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தவகையில் இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்திய அவர் காணியை மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பல்வேறு இழப்புக்களை சந்தித்த மக்கள் வேறு காணிகள் இன்றி எனது காணியில் நீண்ட காலமாக வாழ்ந்து வருவதாகவும், அவர்கள் சட்ட ரீதியாக குறித்த காணியில் ஆட்சி செய்யாவிடினும் அவர்களின் பாதிப்பு நிலையை தான் உணர்வதாகவும் குறிப்பிட்ட அவர், இந்த நிலையில் எனது காணியில் குடியிருக்கும் மக்களில் ஒரு பகுதியினர் தன்னைச் சந்தித்து காணிகளை பகிர்ந்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் இந்த துன்பமான நிலையில் வேறு இடங்களிற்கு அனுப்பி காணியைப் பெற்றுத்தர கோரும் மனநிலை எனக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், தனக்குச் சொந்தமானதென குறித்த பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை, அங்கு குடியிருக்கும் மக்களுக்கே வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருக்கு ஆனந்தசங்கரி ஆலோசனை வழங்கியுள்ளார்.

காணி அற்றோர்கள் என உண்மையாக அடையாளம் காணப்படும் நபர்களுக்கே குறித்த காணியைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அடையாளம் காணும் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் கோரியுள்ளார். இவ்விடயம் தொடர்பில் எழுத்துமூலமான ஆவணத்தை ஓரிரு நாட்களில் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் பிரதேச செயலாளருக்கு தெரிவித்துள்ளார். (9-312-315)

# அதிபர் விடுதி திறப்பு விழா

(சாவகச்சேரி)

யாழ்.சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் அதிபர் விடுதி திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும். அதிபர் திருமதி.ல.முகுந்தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சிவத்திரை சிவநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-2)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத் தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்–2019

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரேமுறையில் செலுத்தக்கூடியஆகக் கூடிய கேள்வித்தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஐப்பசி மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி:- 20/09/2019.
2. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :-23/09/2019. மு.ப 10.00மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 23/09/2019.மு.ப.10.30மணி.
4. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையிடப்படல் வேண்டும். இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரியகாலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டுவருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும்.
6. கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம்,மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோகேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
8. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 05 வருடங்களுக்கு ஒருமுறை வாடகைப்பணம் மீளாய்வு செய்யப்படும்.இம் மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.
9. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும்,கூட்டுறவுச் சங்கங்களும் இக் கேள்வி நடைமுறைக்கமைவாகவிண்ணப்பிக்கலாம்.
10. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 15 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் (VAT)02 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT)வடமராட்சி தெற்குமேற்குபிரதேச சபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.
11. மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்துவரும் மாதம் 10ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப் பணத்தின் 10சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச் சபைக்கு குத்தகையாக,வாடகையாக,வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவார்.
13. குத்தகைக்குபெற்றகடையின் மின்சார இணைப்புக்கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
14. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக,தெரிவுசெய்யப்பட்டகுத்தகைக்காரர் சபையுடன் செய்துகொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்படவேண்டிய பொறுப்புடையவராகின்றார்.

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நெல்லியடிச் சந்தைக் கடைகள் கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBTவரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரகட்டணம் (VAT,NBTவரிகள் நீங்கலாக) | மாதவாடகை (VAT,NBTவரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| UPPER FLOOR | | | | | |
| 01 | UF15 | 510,000.00 | 5,100.00 | 1,000.00 | 4250.00 |
| 02 | UF18 | 390,000.00 | 3,900.00 | 1,000.00 | 3250.00 |
| 03 | UF19 | 390,000.00 | 3,900.00 | 1,000.00 | 3250.00 |
| 04 | UF20 | 390,000.00 | 3,900.00 | 1,000.00 | 3250.00 |
| 05 | UF21 | 390,000.00 | 3,900.00 | 1,000.00 | 3250.00 |
| 06 | UF26 | 360,000.00 | 3,600.00 | 1,000.00 | 3000.00 |
| 07 | UF27 | 360,000.00 | 3,600.00 | 1,000.00 | 3000.00 |

**க.த.ஐங்கரன்,**
**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி. 07/09/2019.**

C-7523

# சுகாதார உதவியாளர் நியமனத்தில் சில முறைகேடுகள் இடம்பெற்றன

## உதவிச் செயலாளர் ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதாரத் திணைக்கள சுகாதாரப் பணி உதவியாளர் நியமனத்தில் முறைகேடுகள் இடம் பெற்றதாக சுகாதார சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் சுகாதாரப் பணி உதவியாளர் வெற்றிடத்திற்கு 1923 பேர் விண்ணப்பித்த நிலையில் 454 பேர் மட்டும் குறித்த வெற்றிடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு விண்ணப்பித்து தெரிவு செய்யப்படாதவர்களின் போராட்டத்தால் கைவிடப்பட்டது.

இந் நியமனத்துக்கான நேர்முகத் தேர்வுக்கு தோற்றியவர்களில் சிலபோலியான தரவுகளைப் பதிவு செய்திருந்தமையும் மற்றும் கணனிமயப்படுத்தலில் ஏற்பட்ட ஒரு சில தவறும் இதற்குக் காரணமாக அமைந்திருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். குறித்த நியமனம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முறையான விசாரணை மேற்கொள்ளப்படும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

# சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட 15 பேர் கிளிநொச்சியில் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட 15 பேர் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த இரு நாட்கள் மேற்கொண்ட விசேட தேடுதலின் போது கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததாக பரந்தன் சிவபுரம் பகுதியில் 04 சந்தேக நபர்களும் கிளிநொச்சி கோணாவில் பகுதியில் 07 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அதே பகுதியில் விற்பனைக்கு தயாராக இருந்த நிலையில் 15 கசிப்பு போத்தல்களுடன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற 2 டிப்பர் வாகனங்களின் சாரதிகளும் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவரும் கல்மடு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் அனைவரும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 4 மாதங்களுக்கு ஒரு முறைநடத்தப்படும் இரத்த தான முகாம்களின் வரிசையில் 14 ஆவது இரத்த தான முகாமானது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இளவாலை பிரதேச வைத்தியசாலையில் இடம் பெறும்.

இதன்போது இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் காணிக் கொள்வனவுக்கு நிதி வழங்கியவரும், இளவாலை பிரதேச வைத்தியசாலையில் பற்சிகிச்சைக்கூட கட்டடத்திற்கு நிதி வழங்கியவருமான அமரர்சற்குணசீலனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும்.(இ-7)


WWAT.

# உடனடி வேலைவாய்ப்பு

ஐக்கிய இராச்சியத்தின் தன்னார்வத் தொண்டு நிறுவனம் "உலகளாவிய விழிப்புணர்வு மையம் (WWAT)" நாடளாவிய ரீதியில் மக்களின் வாழ்க்கைத் தர நிலைகளை இனங்கண்டு அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காக கீழ்வரும் பதவி நிலைகளுக்கு பணியாட்களை உள்வாங்குகிறது.

**பிராந்திய முகாமையாளர்கள்-09**
**குழுத் தலைவர்கள்-25**
**மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள்**

சுயவிபரக் கோவையை 14 நாட்களுக்குள் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அஞ்சல் செய்யவும்.

**E - Mail - recruitment@wwat.org**
**Website - https://wwat.org/career**

C-7524



# பாரதம்

# புனித ஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்

## உளவுத்துறை எச்சரிக்கை

(டில்லி)

புனித ஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறையினர் எச்சரிக்கை விடுத்தனர்.

ஜம்மு காஷ்மீர், டில்லி உள்ளிட்ட சில முக்கிய இடங்களிலுள்ள புனித ஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்தவே தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

காஷ்மீர் வழியாக ஊடுருவ பத்தாயிரம் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியளித்து வருவதாகவும் உளவுத்துறையினர் தெரிவித்தனர்.

அத்துடன், 200 வீரர்களை எல்லையில் துப்பாக்கிச் சூடு நடத்த பாகிஸ்தான் தயார் நிலையில் வைத்துள்ளதாகவும் இதற்கான புதிய தீவிரவாத முகாம்கள் எல்லை அருகே தோன்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியது.

கைபர் பக் துங்க்வா மாகாணம் ஊடாக இவ்வாறு தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவி புனித வழிபாட்டுத் தலங்களின் மீது தாக்குதல் மேற்கொள்ள தயார் நிலையில் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்தது. (ஜ-2)

# அமெரிக்காவில் டொரியன் தாக்கம் 30 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

## 70 ஆயிரம் பேர் முகாம்களில்



(வோஷிங்டன்)

அமெரிக்காவினை அச்சுறுத்தும் "டொரியன்" புயலினால் 30 பேர் உயிரிழந்ததுடன் 70, 000 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்தத் தலைமுறையில் ஏற்பட்ட பேரழிவு என்றும், இந்த எண்ணிக்கை மேலும் உயரும் என்றும் அதிகாரிகள் அச்சம் வெளியிட்டனர்.

கரீபியன் தீவுகளில் உள்ள பஹாமா மற்றும் அபாகோ தீவுகளை டொரியன் புயல் கடந்த 3 ஆம் திகதி தாக்கியது. இதில் பெரும் சேதம் பஹாமா தீவுகளுக்கு ஏற்பட்டது.

சுமார் 70 ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அமெரிக்க பிரதமர் ட்ரம்பிடம் புயல் பாதிப்பு குறித்து பேசி இருப்பதாகவும் விரைவில் அவர் புயல் பாதித்த இடங்களை பார்வையிடுவார் என்றும் தெரிவித்தார்.

அதேநேரம் பஹாமஸ்ஸில் புயல் பாதிப்புக்குள் சிக்கிக் கொண்ட மக்களை மீட்பதற்கு பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் மீட்புப் படைகளை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. அத்துடன் டொரியன் புயல் கார ணமாக நாட்டின் பல பகுதிகளில் தொலைபேசித் தொடர்புகள் துண் டிக்கப்பட்டுள்ளதால் மீட்புப் பணியில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புயல் காரணமாக மருத்துவம் மற்றும் நீர், உணவுப் பற்றாக்குறை உள்ளதால் பஹாமாவிற்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# மசூத் அசார் உள்ளிட்டவர்கள் பயங்கரவாதிகளாக அறிவிப்பு

## அமெரிக்கா ஆதரவு



மசூத் அசார், ஹபீஸ் சயீத் உள்ளிட்ட 4பேரை பயங்கரவாதிகளாக மத்திய அரசு அறிவித்துள்ளமைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தது.

இது தொடர்பாக தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பொறுப்பு துணை செயலாளர். ஆலிஸ் ஜி.வெல்ஸ் தனது டுவிட்டர் தளத்தில் தெரிவிக்கையில், 'மசூத் அசார், ஹபிஸ் சயீத், ஜாகியுர் ரகுமான் லக்வி, தாவூத் இப்ராகிம் ஆகிய 4 பயங்கரவாதிகளை புதிய சட்டத்தின் கீழ் பயங்கரவாதிகளாக அறிவித்த நடவடிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான சாத்தியக்கூறுகளை இந்த புதிய சட்டம் விரிவடையச் செய்யும்' என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தியாவின் சட்டவிரோத செயல்கள் தடுப்பு சட்டம் 1967இன் கீழ், ஒரு இயக்கத்தை மட்டுமே பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

எனவே தனி நபரையும் பயங்கரவாதியாக அறிவிக்க வழி செய்யும் வகையில் இந்த சட்டம் அண்மையில் திருத்தப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் குறித்த நால்வரும் பயங்கரவாதிகளாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சிரியாவில்... 1000 இற்...



(டமாஸ்கஸ்)

சிரியாவில் அதிகரிக்கும் உள்நாட்டு போர் காரணமாக ஆ... பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.கடந்த நான்கு மாதங்கள... பட்டவான் வழித் தாக்குதலிலேயே இவ்வாறு ஆயிரத... அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

## பேஸ்புக் விவகாரம்

# மார்க்கை சிறையில் அடைக்க வேண்டும்

## அமெ.நாடாளுமன்ற உறுப்பினர் ரொன் வைடன் வலியுறுத்து



(வோஷிங்டன்)

பேஸ்புக் பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்களை தவறாக பயன்படுத்தும் விவகாரத்தில் அதன் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஷக்கர்பெர்க்கை சிறையில் அடைக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ரொன் வைடன் வலியுறுத்தினாார்.

சமூக வலைத்தளங்களில் ஒன்றான பேஸ்புக்கை உலகம் முழுவதும் கோடிக்கணக்கான பயனாளர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

அதே சமயம் பேஸ்புக்கில் பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் திருடப்படுவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக பேஸ்புக்' நிறுவனம் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் வழக்குகளை எதிர்கொண்டு வருகிறது.

இந் நிலையில், பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்களை தவறாக பயன்படுத்தும் விவகாரத்தில் பேஸ்புக்' நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஷக்கர்பெர்க்கை சிறையில் அடைக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ரொன் வைடன் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், "பேஸ்புக் பயனாளர்களின் பாதுகாப்பு குறித்து மார்க் ஷக்கர்பெர்க் அமெரிக்க மக்களிடம் மீண்டும் மீண்டும் பொய்யுரைத்து வருகிறார்.

அவர் ஏராளமான மக்களின் மனங்களை காயப்படுத்தி இருக்கிறார். இதற்கு அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும்.

மேலும், இது தொடராமல் இருக்க வெறும் அபராதத்தோடு நிறுத்தாமல் மார்க் ஷக்கர்பெர்க்குக்கு சிறைத் தண்டனை வழங்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

இதேவேளை உலகம் முழுவதும் உள்ள பேஸ்புக் பயனாளர்களில் 41 கோடி பேரின் தொலைபேசி இலக்கத்தை இணையத்தளத்தில் பேஸ்புக் வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சிம்பா... ரொபா...

சுதந்திரத்... ஜனாதிபதியா... முகாபே தனது... கிழமை) சிங்க...

கடந்த ஏப்ர... யசாலையொ... வந்துள்ள நில... றைவு காரண... எய்தியதாக அ... யிட்டனர்.

மூன்று தச... செய்த அவர் ... மாதம் இடம்... பதவியில் இரு...

சிம்பாவே... தைய ஜனாத... மனங்ககவா... Mnangagw...

இந்நிலை... எமர்சன் ட...

# பிரித்த... எண்ணெ...



(டெஹ்ரா...


ஈரானின்... கொடியுடன்... கப்பலிலிருந்... ஈரான் விடு... அமைச்சர் அ... மேலும்...



# ...ில் உள்நாட்டுப் போர்; ...ற்கும் மேற்பட்டோர் பலி!







...மாக ஆயிரத்திற்கும் மேற்
...தங்களில் மேற்கொள்ளப்
...ஆயிரத்திற்கும் மேற்பட்ட

ஜெனீவாவில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றிய போதே ஐ.நா. மனித உரிமை அமைப்பின் தலைவர் இந்தத் தகவலினை மேற்கண்டவாறு வெளியிட்டார்.

மேலும் தெரிவிக்கையில், 'கடந்த ஏப்ரல் மாதம் முதல் சிரியாவின் வடக்குப் பகுதிகளில் வான்வழித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான இட்லிப், ஹமாம் மோசமாக பாதிப் படைந்துள்ளன. இந்தத் தாக்குதல்களில் பொதுமக்கள் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

சிரியாவில் அரச படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 8 ஆண்டுகளாக உள் நாட்டுப் போர் நடைபெற்று வருகிறமை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ...ம்பாவேயின் முன்னாள் ஜனாதிபதி ...ராபர்ட் முகாபே நேற்று காலமானார்

...சுதந்திரத்திற்குப் பின்னர் சிம்பாவேயின்
...ாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரொபர்ட்
...ாபே தனது 95 வயதில் நேற்று (வெள்ளிக்
...மை) சிங்கப்பூரில் காலமானார்.
...கடந்த ஏப்ரல் முதல் சிங்கப்பூரிலுள்ள வைத்தி
...ாலையொன்றில் அவர் சிகிச்சை பெற்று
...துள்ள நிலையில் அவர் நேற்று உடல்நலக்கு
...வு காரணமாக சிகிச்சை பலனின்றி இயற்கை
...தியதாக அவரது குடும்பத்தினர் தகவல் வெளி
...ட்டனர்.
...மூன்று தசாப்த காலமாக சிம்பாவேயை ஆட்சி
...த அவர் கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர்
...ும் இடம்பெற்ற இராணுவ சதித்திட்டத்தினால்
...வியில் இருந்து நீக்கப்பட்டார்.
...சிம்பாவேயின் மூன்றாவது மற்றும் தற்போ
...ய ஜனாதிபதியாக எமர்சன் டாம்பூட்ஸ்வ்
...ாங்ககவா (Emmer son Dambudzo
...nangagwa) பொறுப்பேற்றார்.
...இந்நிலையில், சிம்பாவேயின் ஜனாதிபதியாக
...ர்சன் டாம்பூட்ஸ்வ் மனங்ககவா, "சிம்பா



வேயின் ஸ்தாபக தந்தையும் முன்னாள் ஜனாதிபதியுமான ரொபர்ட் முகாபே காலமானதை நான் அறிவிப்பது மிகுந்த வருத்தத்தோடு தான்' என்று அவரது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

மேலும், "எங்கள் தேசம் மற்றும் கண்டத்தின் வரலாற்றில் அவர் செய்த பங்களிப்பு ஒருபோதும் மறக்கப்படாது. அவருடைய ஆத்மா நித்திய அமைதியுடன் ஓய்வெடுக்கட்டும்" என்று அவர் கூறியுள்ளார். (ஐ-2)

## காஷ்மீர் விவகாரம் தொடர்பில் போருக்கான விதைகளை இந்தியா தூவுகிறது

### பாக்.குற்றச்சாட்டு

(காஷ்மீர்)

இந்தியா போருக்கான விதைகளை தூவுவதாக பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பா ளர் ஆசிப் கபூர் குற்றம்சாட்டினார்.

காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டு அம்மாநிலம் இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளமை குறித்து பாகிஸ்தான் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்ற நிலையில் காஷ்மீர் மாநிலத்தில் இந்திய இராணுவப்படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து தெரிவித்த அவர், "காஷ்மீரின் தற்போதைய நிலை இந்தப் பிராந்தியத்துக்கு மிகவும் ஆபத்தாக மாறியுள்ளது. காஷ்மீரில் இந்தியா மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் போருக்கான விதைகளை தூவும் வகையில் அமைந்துள்ளன.



எங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு எங்களை பலவீனப்படுத்த முடியும் என இந்தியா நினைக்கிறது. ஆனால் போர் என்பது வெறும் ஆயுதங்கள், பொருளாதாரத்தை மட்டும் கொண்டு நடத்தப்படும் போர் அல்ல. அது நாட்டுப் பற்றுடன் நடத்தப்படும் மோதல் என்பதை இந்தியாவுக்கு தெரிவிக்க விரும்புகிறோம் என மேலும் தெரிவித்தார். (ஐ-2)

## ...ரித்தானியக் கொடியுடன் சிறைபிடிக்கப்பட்ட ...ண்ணெய்க் கப்பலிலிருந்த 7 பேர் விடுவிப்பு




(டெஹ்ரான்)
...ஈரானின் வளைகுடாப் பகுதியில் பிரித்தானியக்
...ாடியுடன் சிறைபிடிக்கப்பட்ட எண்ணெய்க்
...பலிலிருந்த 23 பணியாளர்களில் 7 பேரை
...ான் விடுவித்ததாக ஈரான் வெளியுறவுத்துறை
...மைச்சர் அப்பாஸ் தகவல் வழங்கினார்.
மேலும் அவர் தெரிவிக்கை யில், "ஸ்டெனா

இம்பீரோ" என்ற இங்கிலாந்துக் கப்பலை ஈரான் கடற்படை கடந்த ஜுலை மாதம் சிறைபிடித்தது. அந்தக் கப்பலில் இருந்த படைத் தளபதி மற்றும் ஊழியர்கள் மீது தங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் சட்டவிதிகளை மீறிய தால் கப்பல் மட்டும் சிறை பிடிக்கப்பட்டது. கப்பலில் இருந்த ஊழியர்கள் அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பலாம்" என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அக்கப்பலிருந்த இந்தியர்கள் 7 பேரை விடுவித்ததாக ஈரான் தெரிவித்தது. (ஐ-2)

## புதிய ஏவுகணைகள் கொள்வனவிற்கு மத்திய அரசு ஒப்புதல்



(டில்லி)

இந்திய விமானப் படைக்காக 5 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஆகாஷ் ஏவுகணைகளை வாங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

குறித்த திட்டத்திற்கு மத்திய அரசு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆகாஷ் ஏவுகணைகள் ஆகாயத்தில் பறந்து வரும் எதிரி போர் விமானங்களை தாக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளாகும்.

இவை 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் திறன் கொண்டவையாக காணப்படுகின்றது.

அத்துடன் இது ஒளியை விட 2.5 மடங்கு வேகமாக சென்று தாக்கும் வல்லமை பொருந்தியது. இத்தகைய சிறப்புகள் கொண்ட ஆகாஷ் ஏவுகணைகள் முழுவதுமாக உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயார் செய்யப்பட்டது.

புதிதாக கொள்வனவு செய்யப்படும் ஆகாஷ் ஏவுகணைகள் பாகிஸ்தான் மற்றும் சீன எல்லைகளில் நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# ‘பொலநறுவை மன்னர் யுகம் முதல் ஜனாதிபதி யுகம் வரை’ ஆய்வு நூல் மாணவர்கள், மக்களுக்கு கையளிப்பு



(பொலநறுவை)

“பொலநறுவை மன்னர் யுகம் முதல் ஜனாதிபதி யுகம் வரை” ஆய்வு நூலை பொலநறுவை மாணவர்களுக்கும் மக்களுக்கும் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நூலை பாடசாலை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் பொலநறுவை றோயல் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதுடன், அதனை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் அதே கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இந் நூலை பாடசாலை மாணவர்களுக்கு கையளிப்பதனை அடையாளப்படுத்தும் வகையில் மாவட்டத்தின் சில பாடசாலை அதிபர்களுக்கு ஜனாதிபதி வழங்கினார்.

பேராசிரியர் சுனில் ஆரியரத்ன இந்நிகழ்வின் பிரதான உரையை ஆற்றினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பண்டைய பொலநறுவை நகரின் பெருமைகளை எடுத்துக் கூறும் வகையில் பிரபல கலைஞர்களின் பங்குபற்றலில் விசேட கலை நிகழ்ச்சிகளும் இதன் போது இடம்பெற்றன.

இலங்கை வரலாற்றில் பொலநறுவை நகரம் முக்கிய பங்கு வகிக்கின்றது. 166 வருடங்களாகக் காணப்பட்ட பொலநறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் மின்னேரிய விவசாயக் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டதுடன், மக்கள் மீண்டும் அதிகளவில் அங்கு குடியேறத் தொடங்கினர். மேலும் இப்பிரதேசமானது வளமான நெல் உற்பத்தியைக் கொண்ட பூமியாகவும் வரலாற்றுப் பெறுமதிமிக்க பிரதேசமாகவும் விளங்குகின்றது.

இப் பிரதேசம் சார்ந்ததாக கட்டியெழுப்பப்பட்ட வரலாறு மற்றும் காலப்போக்கில் ஏற்பட்ட முறையான அபிவிருத்தி பற்றிய விபரங்கள் பொலநறுவை ஆய்வு நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புதிய அறிவை பெற்றுக் கொள்ளும் அதேவேளை, கடந்த காலத்துடன் இணைந்த நிகழ்காலத்துடன் போட்டியிட்டு சிறப்பான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலேயே இந்த நூல் உருவாக்கப்பட்டது. (இ-7)

# சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் இலங்கை மாணவனுக்கு தங்கப்பதக்கம்

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் இடம்பெற்ற சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் இலங்கை மாணவனான ரொஹான் ஆதித்ய வீரகோன் தங்கப்பதக்கம் வென்றார்.

குறித்த வெற்றியையடுத்து ஜப்பானில் நடைபெறவுள்ள உலக சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றுவதற்கு ரொஹான் ஆதித்ய வீரகோன் தகுதி பெற்றார். குறித்த போட்டி டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஜப்பானின் டோக்கியோ நகரில் இடம்பெறவுள்ளது. (இ-7)




# தாக்குதலில் பாதிப்படைந்த 95 வீதமானோருக்கு நட்டஈடு

## அமைச்சர் கிரியெல்ல தகவல்



(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களில் 95 வீத மானவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டதாக சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பாக முழுநாள் நாடாளுமன்ற விவாதம் நடத்தத் தயார் எனவும் அவர் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, “ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த 264 பேருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் நட்டஈடு வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகக் கூறப்பட்டது. எனினும் 22 பேருக்கு மாத்திரமே 5 இலட்சம் ரூபாய் வீதம் நட்டஈடு வழங்கப்பட்டது.

அதேபோல் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வீதம் நட்டஈடு வழங்க நூற்றுக்கும் அதிகமானவர்களின் பெயர்கள் இருந்தபோதும் சிலருக்கே நட்டஈடு வழங்கப்பட்டது.

அத்துடன் இது தொடர்பாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் அடிக்கடி கூறி வருகிறார். மக்கள் வெறுப்படைந்திருப்பதுடன் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளுக்குமே மக்கள் பேசுகின்றனர். தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்கப்படாமையால் ஏற்பட்ட பிரச்சினைக்கு உடனடியாக அரசாங்கம் அல்லது நாடாளுமன்றம் தீர்வொன்றை வழங்க வேண்டும்” என்றும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புரியாத புதிர்கள்

ஒருத்தர் வந்தார். “சேர்! தலையை பிய்த்துக்கொள்வதைப்போல ஏதாவது தகவல் இருந்தா சொல்லுங்களேன்” என்றார்.

“இப்ப தினமும் அப்படித்தானே சேர் நடந்துகொண்டிருக்கு” என்றார். அவர் ரொம்பவும் அறிவுபூர்வமான ஒரு ஆசாமியாகத் தெரிந்தார்.

சரி...இவரை இன்றைக்கு முடிந்த அளவுக்குக் குழப்பிப் பார்க்கலாம் என்று ஆரம்பித்தேன். அவரைப் பார்த்தே ஒரு கேள்வி கேட்டேன்...“சேர் நான் சொல்கிறதெல்லாம் பொய் என்று ஒருத்தன் சொல்கிறான். அது உண்மையா? பொய்யா?” என்று கேட்டேன். அவர் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தார்.

“அதுதான் நான் சொல்லுறது பொய் என்று அவனே சொல்கிறானே சேர்...அப்புறம் என்ன சந்தேகம். அது பொய் தானே” என்றார்.

“சரி அவன் சொல்லுறது பொய் என்று சொல்லுறீங்கள்! அவன் என்ன சொல்லுகிறான்? நான் சொல்லுகிறது பொய் என்கிறான். அப்படியென்றால் அவன் பொய் என்று சொல்லுறது பொய்! அப்ப அது ‘உண்மை’ என்றுதானே ஆகும்” என்று ஆரம்பித்தான்.

அவர் லேசா தலையைச் சொறிய ஆரம்பித்தார். சரி கச்சேரி களைகட்ட ஆரம்பித்து விட்டது என்பதை புரிந்து கொண்டேன்.

இன்னொரு கதை சொல்கிறேன் கேளுங்கள் என்று ஆரம்பித்தேன். ஒரு புத்திசாலியான பெரியவர். அவர் ஏதோ தப்பு செய்து விட்டார். விசாரணை செய்தார்கள். எல்லாம் முடிந்ததும் கடைசியாக நீதிபதி அவரைப் பார்த்துச் சொன்னார்...

“உங்கள் கடைசி விருப்பத்தைச் சொல்லலாம். ஆனால் ஒரு விடயம்...நீங்கள் உண்மையைச் சொன்னால் உங்களை தூக்கிலே போடுவோம். பொய் சொன்னால் உம்முடைய தலை வெட்டப்படும்” அப்படி என்றார் நீதிபதி.

அந்த புத்திசாலியான பெரியவர் உடனே “அப்படியென்றால் என் தலை வெட்டப்படட்டும்” என்றார். இதைக் கேட்டதும் தண்டனையை தள்ளி வைத்து விட்டார்கள். ஏன் தெரியுமா? அவர் தலையை வெட்டிவிட்டால் அவர் செய்த குற்றம் உண்மை என்று ஆகும். அது உண்மை என்று ஆனால் அவரை தூக்கிலே போட்டிருக்க வேண்டும்.

சரி அவரை தூக்கிலே போடலாம் என்றால் அப்போது அவர் சொன்னது ‘பொய்’ என்று ஆகிவிடும். அதனாலே அவர் தலை வெட்டப்பட்டிருக்க வேண்டும்.

இப்போது அவரை என்ன செய்வது? என்று என் எதிரிலே உட்கார்ந்திருந்தவரைக் கேட்டேன்.

நிஜமாகவே அவர் இப்ப குழம்ப ஆரம்பித்து விட்டார். ஒரு மாதிரியா என்னைப் பார்த்தார்.

இதுக்கு நான் என்ன செய்ய முடியும். அவர் தானே இது மாதிரி தகவலைக் கேட்டார்.

இப்ப நான் சொன்ன உதாரணங்கள் ஏற்படுத்துகின்ற குழப்பம் இருக்கே பாருங்க அதுக்குப் பேர் தான் Paradox அதாவது முரண் உரை அல்லது புரியாத புதிர்.

அறிவியல் துறையிலேயும் இதுமாதிரி சிக்கல்கள் ஏற்படுவது உண்டாம். அண்மையிலே ஒரு கட்டுரை படித்தேன். அதிலே அதைப்பற்றி நிறையச் சொல்லியிருந்தார்கள். அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்.

இப்ப எதிரிலே உட்கார்ந்திருக்கிறாரே நண்பர் அவருக்குத் திருப்தியா இருக்கிற மாதிரி ஒரு கதை சொல்லுவோம்.

ஒரு ஆள் ஒரு பெரிய கடைக்குள்ளே நுழைந்தார். அது ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோர். அவர் எதையோ யாருக்கும் தெரியாமல் எடுத்து விட்டார் போல இருக்கு.

அவரைக் கூப்பிட்டு தனியா விசாரிக்கிறார் அந்தக் கடைக்காரர். அந்த ஆள் அவரைப் பார்த்து,

“அதுசரி கடைக்காரரே நான் உங்கள் கடைக்குள்ளே நுழைந்ததை நீங்கள் பார்த்தீர்களா?” என்றார்.

‘ஆமாம் பார்த்தேன்’ என்றார் அவர்.

“சரி இதுக்கு முன்னர் என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?” என்று கேட்டார் அந்த ஆள்.

‘இல்லை’ என்றார் கடைக்காரர்.

“அப்படியென்றால் கடைக்குள்ளே நுழைந்தது நான்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்றார் அந்த ஆசாமி.

கடைக்காரர் தலையைப் பிய்த்துக்கொள்ள ஆரம்பித்தார்.

இந்தக் கதையை சொல்லிக்கொண்டு எதிரிலே இருந்த நண்பரைப் பார்த்தேன்.

ஆரம்பத்திலே தலையை பிய்த்துக்கொள்கிற மாதிரித்தானே ‘தகவல்’ கேட்டார்.

இப்போது அவர் சட்டையையும் சேர்த்து பிய்த்துக்கொண்டு தெரிவிலே இறங்கிப் போய்க்கொண்டிருந்தார்.

அநேகமாக இனிமேல் இந்தப் பக்கம் வரமாட்டார் என்று நினைக்கிறேன்.

# எழுக தமிழ்- 2019 எழுச்சிப் பேரணிக்கு தமிழர் மரபுரிமை பேரவை பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் வாழ்வுரிமை சார்ந்த கோரிக்கைகளை முன்னிறுத்தியும் தமிழ் மக்கள் பேரவையின் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை கண்டடைவது தொடர்பிலான தீர்வுத் திட்ட யோசனைக்கான மக்களாணையைக் கோரும் வகையிலும் தமிழ் மக்கள் பேரவையால்



எதிர்வரும் 16 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணி குறித்து தமிழ் மக்கள் பேரவை மற்றும் தமிழர் மரபுரிமை பேரவை ஆகியவற்றுக்கிடையே விரிவான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில், எழுக தமிழ் எழுச்சிப் பேரணி முன்னெடுப்புகள் குறித்தும் ஒரு மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவையின் முக்கியத்துவம், செயற்பாடுகள், எழுக தமிழ் பேரணியின் பின்னரான காலத்தில் அதன் செயற்பாடுகள் குறித்தும் இரு தரப்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டதன் அடிப்படையில் இந்த எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணிக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக தமிழர் மரபுரிமை பேரவை சார்பில் பங்கேற்றிருந்த பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழ் மக்கள் பேரவை தலைமை அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (இ)

# புராணபடன வித்தகர் சிவஸ்ரீ.வை.குமாரசுவாமிக் குருக்கள்

## நூறாவது ஜனன தினத்தில் நினைவு கொள்வோமாக


மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய ஆதீன கர்த்தாவாகவும் தலைசிறந்த புராணபடன உரையாசிரியராகவும் விளங்கிய பெருமை சிவஸ்ரீ வைத்தியலிங்கம் குமாரசாமிக் குருக்கள் ஐயாவுக்கு உண்டு. இவர் 4.09.1919 ஆம் ஆண்டு ஆவணி மூல நட்சத்திரத்தில் ஜனனமானார். ஐயா வைத்திலிங்கம் ஞானவல்லி தம்பதியரின் தவப்புதல்வர்களில் ஒருவர்.

கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். தமது உயர் நிலைக் கல்வியை முகாந்திரம் தி. சதாசிவ ஐயாவால் ஸ்தாபிக்கப்பெற்ற சுன்னாகம் பிராசீன பாடசாலையில் பெற்றார். இங்கு புன்னாலைகட்டுவன் வித்துவ சிரோமணி சி.கணேசையாவிடம் ஐயந்திரிபுற கற்கும் பேறு பெற்றார். இதனால் கணேசையாவின் முதன் மாணாக்கராகக் கல்வி பெற்ற பெருமையுடையவரானார்.

குமாரசுவாமிக் குருக்கள் ஐயாவுடன் உடன் பிறந்த சகோதரர்கள் நால்வர், இவர்கள் கல்விப் பாரம்பரியத்தில் பெருமை பெற்று அரச அலுவலகங்களில் பணிப்பாளராகவும், தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றினார்கள்.

சிவத்தமிழ் செல்வி அம்மா, பௌராணிக வித்தகர் வ.கு.க. சர்மா, சிவத்திரு. சி.பீதாம்பர ஐயா போன்றோரால் எனக்கு குருக்கள் ஐயாவின் தொடர்பு கிடைத்தது.

யோகர் சுவாமிகள் தரிசனம் செய்த துர்க்கை அம்மன் கோவிலில் அக்காலத்தில் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் என்பன முறையே ஆண்டுதோறும் புராணபடனம் நடைபெற்று வந்தது. இப் புராணபடன நிகழ்வில் பௌராணிக வித்தகர். வ.குகசர்மா, தமிழறிஞர்



ச.அம்பிகைபாகன், இந்து சாதனம் சிவப்பிரகாசம், சுன்னாகம் பண்டிதர் இ.நமசிவாயம், ஏழாலை பண்டிதர், மு. கந்தையா, பண்டிதர் க.சச்சிதானந்தம், அளவெட்டி சி.விஸ்வநாதன் உபாத்தியார், மல்லாகம் கல்வி அதிகாரி அ.சரவணமுத்து, சிவத்தமிழ் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதை சிவபாக்கியம் பாலநாதன், திருமதி. இராசையா போன்ற பலர் பங்கு கொள்வர்.

''புராணங்களை நியமாகப் படித்தலும் அவைகளுக்கு பொருள் சொல்லுதலும் சிறந்த புண்ணியமாகும். எல்லோரும் கேட்டு உய்யும் பொருட்டு திருக் கோவில்களிலே யோக்கியர்களைக் கொண்டு புராணங்களை வாசித்து பொருள் சொல்லுதல் மிக மிக மேலான புண்ணியம்'' என ஆறுமுக நாவலர் பெருமானது வாக்காகும். இதனை நம் குருதேவன் பண்டிதமணி சி.க. பல்வேறு சந்தர்ப்பத்தில் பேசியும் எழுதியும் உள்ளார்.

இத்தகைய பெருந்தொண்டையே சிவஸ்ரீ வை.குமாரசுவாமிக்குருக்கள் ஐயா நம் நாட்டுக்குச் செய்துள்ளார். மேலும் நம் நாட்டில் உள்ள பல கோவில்கள் தோறும் சென்று புராண படனத்துக்கு உரை சொல்லி "உரையாசிரியர்'' என்னும் பெருந்தகமை பெற்றுள்ளார். நம் நாட்டில் ஏற்பட்ட 30 வருட கால யுத்தக் கொடுமைகளால் கொல்லங் கலட்டி விநாயகப் பெருமாளை விட்டு விலக முடியாமல் மனத்தளர்ச்சியுடன் சுழிபுரம் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் அருகே சில காலம் தங்கி வாழ்ந்தார். அங்கும் கோயிலில் நடைபெற்ற கந்த புராண படன நிகழ்வில் பங்கு கொண்டு உரைவிளக்கம் செய்தார்.

சுழிபுரம் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபையினர் கந்தபுராணப் படிப்பு பூர்த்தி விழாவன்று 29.01.1994 அன்று சிவஸ்ரீ வை.குமாரசுவாமிக் குருக்கள் ஐயாவின் கந்தபுராண பயன் சொல்லி உரை விளக்கத்தின் அருமை பெருமைகளை பாராட்டுவதற்கென விழாவெடுத்தனர். பாராட்டவும் செய்தனர்.


இதனை அறிந்த மாவை ஆதீன மகாராஜ ஸ்ரீ.சு.து.ஷண்முகநாதக் குருக்கள் ஐயா போக்குவரத்துக்கள் வசதியற்ற காலத்தில் சுழிபுரம் சென்று புராணப் படிப்பு பூர்த்தி விழாவில் பங்கு கொண்டு சிவஸ்ரீ.வை. குமாரசுவாமிக்குருக்கள் ஐயாவை பாராட்டிக் கௌரவம் செய்தார். மகாராஜ சண்முகநாதக் குருக்கள் ஐயா அங்கு சென்றமையால் நம் போன்ற சாமானியர்கள் சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் ஐயாவின் அருமை பெருமைகளைக் கூற என்ன தான் தகுதியுடையோம் எனச் சிந்திக்கத் தோன்றுகிறது.

குருக்கள் ஐயா 20.03.1995 ஆம் ஆண்டு சிவபதம் எய்திய போது பயங்கரமான சூழலிலும் ஐயாவின் பூதவுடலைத் தரிசித்து அஞ்சலி செலுத்திய சபைகளும் சங்கங்களும் அநேகம்.

கந்தபுராண கலாசார நாடு நமது யாழ்ப்பாணம். யாழ்ப்பாண கலாசாரம், கந்தபுராண கலாசாரம், கந்த புராணத்தின் அருமை பெருமகளை உரை செய்த உரையாசிரியரும் பௌராணிகருமான சிவஸ்ரீ வை.குமாரசுவாமிக் குருக்கள் ஐயாவின் ஏகாந்த நிலையில் நூறாவது ஜனன தினத்தில் நினைவு கொள்வோமாக.

கா. சிவபாலன்

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

வடக்கு- கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் உருவப் படத்திற்கு விளக்குமாற்றால் அடித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா, ஏ-9 வீதியில், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக 930 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களே குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்ட எவரும் உயிருடன் இல்லை. இனி சர்வதேச விசாரணையும் இல்லை. உள்நாட்டு விசாரணையும் இல்லை. தமிழ் மக்கள் கோத்தபாயவிற்கு வாக்களிக்க வேண்டும் என வடக்கு- கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் வவுனியாவில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

குறித்த கருத்தை வன்மையாகக் கண்டித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வரதாராஜபெருமாளின் படத்தினை "தமிழர் இரத்தம் குடிக்கும் ஒட்டுக்குழு வரதர்" என குறிப்பிட்டு காட்சிப்படுத்தி, அப்படத்திற்கு சாணித் தண்ணீரில் விளக்குமாற்றை தோய்த்து அடித்து தமது கோபத்தை வெளிப்படுத் தினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். எமது பிள்ளைகள் மீண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் போராட்ட களத்தில் நாம் தினமும் செத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் எமது பிள்ளைகள் காணாமல் போனபோது அரசுடனும் இந்தியாவுடனும் இணைந்து ஒளித்திருந்த ஒட்டுக்குழு வரதர் தற்போது எமது பிள்ளைகளை இல்லை எனக் கூற என்ன அருகதை இருக்கிறது. அவரது மகள், மனைவி காணாமல் போயிருந்தால் இப்படி சொல்லியிருப்பாரா? என தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதுடன், தமது போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்த வேண்டாம் எனவும் கண்ணீர் மல்க கோரினர். (9-250-299)

# பதில் செயலாளர் நியமனம்




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் பதில் செயலாளராக கே.தெய்வேந்திரம் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனினால் நியமிக்கப்பட்டார். கே.தெய்வேந்திரம் வடக்கு மாகாண சபையின், விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர்விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக பணியாற்றிக் கொண்டிருப்பதுடன் அதற்கு மேலதிகமாக இந்த நியமனம் ஆளுநரினால் வழங்கப்பட்டது.

இந் நியமனம் வழங்கும் நிகழ்வு ஆளுநர் செயலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. (இ-7)

# சூழலுக்கிசைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 183

## வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற புத்தாக்கங்களின் கண்காட்சி!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இளையவர்களின் மத்தியில் உள்ள புத்தாக்கத் திறனை (Innovative skills) விருத்தி செய்வது அவர்களின் சிந்தனா சக்தியை தட்டியெழுப்பி இத்தேசத்திற்கும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்னும் அவரவர் வீட்டின் தேவைகளுக்கென இலகுவான வேலைகளைச் செய்யும் எளிமையான புதிய இலகு தொழில்நுட்பங்களை உருவாக்குவதன் மூலம் சூழலுக்கிணைவான (Ecofriendly) இலகு இயந்திரங்களை உருவாக்கி நாம் எதிர்பார்க்கும் விடயங்களை எளிதாக, சிக்கனமாக செய்து முடித்து விடலாம். பல்வேறு திறன்களைக் கொண்ட திறமையாளர்களை இனங்கண்டு அவர்களை மேலும் ஊக்கப்படுத்துவதற்கு இவ்வாறான கண்காட்சி நிகழ்வுகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அந்த வகையில் கடந்த இருநாட்களாக நடைபெற்ற யாழ்ப்பாண பாதுகாப்புப் படையின் பிரிவினால் "பனங்காட்டில் புத்திக் கூர்மை" (Palmyrah ingenuity) என்பதனை கருவாக வைத்து ஒழுங்கு செய்யப்பட்ட இந்த புத்தாக்கத்திற்கான கண்காட்சியில் பலரையும் புதிய வகை கண்டு பிடிப்புக்களுக்குள் உள்ளீர்த்ததை அவதானிக்க முடிந்தது. முழுக்க முழுக்க படைப் பிரிவின் உத்தியோகத்தர்களினால் அவர்களின் எண்ணத்தில் உருவாக்கப்பட்டு அவற்றினை மாதிரி உருக்களாக மாற்றியிருந்ததுடன் இந்த உருக்கள் போலியானதாக இல்லாமல் உண்மையானதாக அவற்றின் செயற்படு திறனைக் காட்சிப்படுத்தியிருந்தது, கண்டுபிடிப்புக்களது நம்பகத் தன்மையை வெளிக்கொணர்ந்தது.

பாடசாலை மாணவர்கள் பலரது கவனத்தையும் ஈர்த்த இப்புத்தாக்க கண்காட்சியில் பல விடயங்கள் பேசுபொருளாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. எளிமையான புத்தாக்க பொருட்களுடன் தானியங்கி இயந்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றை கண்டு பிடித்தவரினது விபரங்களுடன் காட்சிப் பொருள் பற்றிய விளக்கங்கள் மும்மொழியிலும் காட்சிப்படுத்தப்பட்டது அனைவரும் வாசித்து விளங்கிக்கொள்ள இலகுவாக இருந்தது. ஒவ்வொரு காட்சிப் பொருளுடனும் தமிழ் மொழியில் விளக்கமளிப்பதற்காக அதிகாரிகள் இருந்தமை காட்சிப் பொருட்கள் பற்றிய சந்தேகங்களை நேரடியாக கேட்டு விளங்கிக் கொள்ள வாய்ப்பாக இருந்தது.

புத்தாக்கங்களும் கண்டுபிடிப்புக்களும் இது சார்ந்த மாணவர்களை மற்றும் இளையவர்களைத் தூண்டிவிடக்கூடிய செயற்றிறன் கொண்டவையாகும். மாணவர்களது சிந்தனையின் எல்லையை மேலும் விரிவாக்கி அவர்களை இவ்வாறான பல புத்தாக்கங்களை உருவாக்க இக்கண்டு பிடிப்புக்கள் தூண்டுதலாக அமையும் எனலாம். குறிப்பிட்ட சில காட்சிப்பொருட்கள் எளிமையான விடயங்களை வெளிக்கொணர்ந்தாலும் அவற்றின் பயன்பாடு பல வழிகளிலும் சிக்கனமாக பயனுள்ளதாக அமையக் கூடியனவாகும். திறமைகள் எங்கிருந்தாலும் அவற்றினை தட்டிக் கொடுத்து வளர்த்தெடுப்பது அவசியம் என்பதாலும் அந்தத் திறமைகளூடாக விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை மேலும் மேலும் வளர்த்தெடுப்பற்கு இவ்வகையான கண்காட்சி கூடங்கள் பொருத்தமானவையாகும். ஒவ்வொருவரினாலும் விளக்கப்பட்ட புத்தாக்கங்களை மதிப்பீடு செய்து வெற்றியாளர்களை கௌரவப்படுத்தியிருந்ததையும் கண்டறியக்கூடியதாக இருந்தது.

பெரியளவில் கரட் சீவுவதற்கான சிறிய மின்சாரத்தைப் பயன்படுத்தி செயற்படும் கருவி, வெங்காயம் வெட்டுவதற்கான் கருவி இவ்வாறான மரக்கறிகளை விரைந்து வெட்டுவதற்கு ஏற்றதாக அமைந்திருந்தன. இதனை இன்னும் மெருகேற்றி முறையான பாதுகாப்பான வெட்டும் கருவிகளாக மாற்றினால் இவற்றினை பயன்படுத்துவதனை முழுமையாக எதிர்பார்க்கலாம்.

உடற்பயிற்சி செய்யும் பொறிமுறையில் (Gym exercising mechanism) பொருத்தியிருக்கும் கருவி மூலம் செல்லிட தொலைபேசியை சார்ஜ் செய்யும் வசதியும் சிறியளவு மின்சாரத்தை சேமித்து வைக்கும் வசதியும் அனைவரையும் கவர்ந்தது. இவ்வாறான கருவிகள் மூலம் நாம் சக்தியை உருவாக்குவதற்கான வசதிவாய்ப்புக்களை விரிவாக்குவதுடன் இவ்வாறான பொறிமுறையை வேறு இடங்களிலும் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளலாம். மின்சாரசக்தியை சேமிக்கும் அதே நேரத்தில் வேறு வகையில் மினசாரத்தை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க இவ்வித கண்டுபிடிப்புக்கள் வழி செய்யும்.

வெல்டிங் செய்யும் பட்டறைகளில் வெல்டிங் செய்பவர் அதிலிருந்து எழும் நச்சுப் புகையை சுவாசிக்க வேண்டிய நிலையிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்காக முகத்தை மறைக்கும் கருவியில் சிறிய வகை காற்றாடியை பொருத்தி புகையெதுவும் உள்ளிழுக்கப்படாமல் வெளித்தள்ளத்தக்க வகையில் அமைத்திருந்தது பயனுள்ள கண்டுபிடிப்பாக இருந்தது.

பிளாஸ்ரிக்கினை மீள்சுழற்சி (Recycling of plastics) செய்வதற்கான சிறியளவிலான இயந்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. பிளாஸ்ரிக் போத்தல்களை உருக்கி மிகவும் சிறிய துணிக்கைகளாக ஆக்கியிருந்ததை இயந்திரத்தை இயக்கிக் காண்பித்தார்கள். இதனை அடிப்படையாக வைத்து பாரிய இயந்திரங்களை உருவாக்கி ஆங்காங்கே தேங்கும் வெற்றுப் போத்தல்களை துணிக்கைகளாக மாற்றி மீண்டும் அவற்றை வேறு பொருட்கள் உருவாக்க பயன்படுத்தலாம் எனக் கூறப்பட்டது. பிளாஸ்ரிக்கை வேறு வகையில் மீள்சுழற்சி செய்வது கடினமாகையால் இந்த தொழில்நுட்பத்தை கவனத்தில் கொள்ளலாம்.

வாகனமொன்று நீரில் மூழ்கினால் அது மிதந்து வருவதற்கான பொறிமுறை ஒன்று அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டால் மூழ்கும் போதான சமிக்ஞையைப் பயன்படுத்தி அதில் இணைக்கப்பட்ட மிதப்பு போன்ற பொறி முறை விரைந்து தானாக இயங்கி வாகனத்தை நீரின் மேற் பரப்புக்கு கொண்டு வருவதான கண்டு பிடிப்பு வாகன ஓட்டிகளுக்கான பயனுள்ள பொறிமுறையாக இருந்தது. நான்கு வயர்களை மட்டும் பயன்படுத்தி ஒரு வீட்டிற்கான மின்னிணைப்பை முழுமையாக்குவதுடன் அதிகளவு வயர்களை பயன்படுத்தத் தேவையில்லை என்பது பற்றிய விளக்கமும் சிறப்பாக காண்பிக்கப்பட்டது.

சக்கரநாற்காலியில் அமர்ந்திருக்கும் ஒருவரின் குரலை கிரகித்து நாற்காலி இயங்குவதான பொறிமுறை இயக்கி காண்பிக்கப்பட்டது. இதில் செல்லிட தொலைபேசியூடாகவோ அல்லது ஒலி வாங்கியூடாகவோ நாற்காலியை இயக்குவதான பொறிமுறை இன்னொருவர் துணையின்றி நாற்காலியைப் பயன்படுத்துவதான விளக்கம் புதிதாக இருந்தது. பாடசாலைகள் மற்றும் பொது நிகழ்வுகளில் நடைபெறும் நிகழ்வுகளில் பல காமராக்களில் பதிவு செய்யப்படும் வீடியோக்களை திரையில் இலகுவாக எடிட்டிங் செய்து காண்பிக்கும் வகையில் சாதாரண சூட்கேசுக்குள் அடக்கக் கூடியவாறு உள்ளடக்கப்பட்ட கருவி கவனத்தை ஈர்த்தது.

வவுனியா மற்றும் வேறு பல இடங்களிலுள்ள கல்சியம் செறிவாகவுள்ள நீரிலிருந்து வேதியல் மாசுக்களை அகற்றி சிறந்த குடிநீரை பெறக்கூடிய எளிய பொறிமுறையுடனான கருவி அனைவரையும் ஈர்த்தது. 2 லீற்றர் நீரிலிருந்து 300 மில்லி லீற்றர் கல்சியம் மற்றும் வேறு வேதியல் மாசுக்கள் இல்லாத சிறந்த குடிநீரைப்பெறுவதுடன் மீதியான நீரை வேறு தேவைகளுக்கு குறிப்பாக குளிப்பதற்கு, துணி துவைப்பதற்கு மற்றும் பயிர்களுக்கு பாய்ச்சுவதற்கு ஏற்றதாக காண்பிக்கப்பட்டது. இது குடிநீரில் கல்சியம் அதிகரிப்பதனால் ஏற்படும் சிறுநீரகப் பிரச்சினைக்கு தீர்வாக அமைந் திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

வெல்டிங் செய்வதற்கு தேவையான டிரான்ஸ்போமர் கருவிக்குப் பதிலாக பிளாஸ்ரிக் வாளிக்குள் எடுக்கப்பட்ட 5 லீற்றர் நீருக்குள் கரைக்கப்படும் ஒரு பைக்கற் சாதாரண உப்பின் மூலமாக அதனை டிரான்ஸ்போமராக மாற்றி வெல்டிங் செய்வதை செய்து காட்டிய போது எளிய பொறிமுறையின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டது. இலகுவாக எடுத்துச்செல்லக்கூடியவாறான இவ்வகைப் பொறிமுறை ஒட்டுதல் வேலை செய்பவர்களுக்கு சிறந்த மாற்றுவழியாகவும் செலவு குறைந்த வழிவகையாகவும் இருந்தது. ஆனால் மின்சாரத்துடனான தொழில் என்பதனால் பாதுகாப்பான பொறிமுறையாக உருவாக்கினால் நல்ல பயனைத் தரும் என்பதனை அதில் பங்கு பற்றியவர்கள் கருத்தும் தெரிவித்திருந்தார்கள்.

அலுவலகமொன்றில் அதிகளவிலான இறப்பர் ஸ்ராம்புக்கள் பயன்படுத்தும் இடத்தில் குறிப்பிட்ட ஸ்ராம்பை விரைந்து பயன்படுத்துவதற்கான பொறிமுறை சிறப்பாக இருந்தது. அதில் பயன்படுத்தும் ஸ்ராம்புக்களுக்கான பாதுகாப்பு பொறிமுறையும் உள்ளடக்கப்பட்டிருந்தது இன்னும் சிறப்பாக அமைந்திருந்தது.

இலகு முறையில் மரமொன்றில் ஏறும் கருவி அதனை இயக்கும் வீடியோ மூலம் காண்பிக்கப்பட்டது. தேங்காய் உரிக்கும் கருவி, சின்னத்தை தானியங்கி முறை மூலம் அச்சிடும் கருவி, ஒரே வகையான சித்திர அமைப்பை பதிப்பிக்கும் கருவி, மனிதனின் முகத்தை இனங்காண்பதன் மூலம் பாதுகாப்பை உறுதி செய்யும் கருவி எனப் பலவற்றை கண்காட்சியில் காட்சிப்படுத்தியிருந்தார்கள்.

புத்தாக்கங்களுக்கான இவ்வாறான கண்காட்சி வருடா வருடம் நடத்தப்படுவதையும் அதில் காட்சிப்படுத்தப்படும் புத்தாக்கங்கள் பற்றிய விளக்கங்கள், மாதிரிகளின், படங்கள் என்பன பற்றிய விளக்கக் கையேடு அவை பற்றிய விடயங்களை அறியத் தூண்டுவதாகவும் அமைந்தன. எமது தேசத்தின் புத்தாக்க சிந்தனையை இவ்வாறான களம் அமைக்கப்பட்டு கொடுக்கப்படும் போதும் இவற்றின் பயன்பாட்டை ஒரு விற்பனைப் பொருளாக மாற்றி பலரும் பயன்படுத்தும் வகையில் செய்தல் வேண்டும். இக்கண்டு பிடிப்புக்களுக்கான உரிமம் (Patentrights) புத்தாக்கத்தில் ஈடுபடுபவர்களால் உருவாக்கப்படல் வேண்டும். இல்லையெனில் இன்னொருவர் தமது உருவாக்கம் என உரிமம் கோர வாய்ப்புக்கள் அதிகம்.

எமது தேசத்தில் இவ்வாறான பல கண்டுபிடிப்புக்கள் உருவாக்கப்பட்டு அவற்றினை மக்கள் பரந்தளவில் பயன்படுத்தும் போதும் கிடைக்கின்ற மகிழ்ச்சி அளப்பரியது. இவ்வாறான புத்தாக்கங்களை வெளிக்கொணர்ந்து அனைவருக்கும் பயனுள்ளதாக மாற்றியமைக்கும் போது அவற்றின் பயன்பாடு விரிவாக்கப்படுவதுடன் மின்சாரம் மற்றும் தேவையான உள்ளீட்டுப்பொருட்கள் என்பனவற்றை அளவறிந்து, தேவையறிந்து வினைத்திறனாகப் பயன்படுத்திக் கொள்வதுடன் மின்சாரத்தை தவிர்த்து அல்லது சிக்கனமாகப் பயன்படுத்தும் பொருட்களை ஊக்குவித்து இன்னும் தேவையான உள்ளீடு பொருட்கள் என்பனவற்றை அளவறிந்து, தேவையறிந்து வினைத்திறனாக சிக்கனமாகப் பயன்படுத்த வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

"ஞாலம் கருதினும் கை கூடும் காலம்
கருதி இடத்தால் செயின்"

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கின்படி ஒருவன் காலமறிந்து, ஏற்ற இடமறிந்து ஒரு செயலைச் செய்வானாயின் அவன் இவ்வுலகத்தையே ஆளக் கருதினாலும் அது கைகூடும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 196



# கிளி. மன். மாவட்டங்களில் எழுக தமிழ் பரப்புரை







தமிழ் மக்கள் பேரவையினால் எதிர்வரும் 16 ஆம் திகதி முன்னெடுக்கப்படவிருக்கும் எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணி நிகழ்வுக்கான ஆதரவுகோரி கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளுடன் எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் சந்திப்பினை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களை பல்வேறு தளங்களில் பிரதிநிதித்துவம் செய்துவரும் பொது அமைப்புகளையும் சமூகமட்ட அமைப்புகளையும் நேரில் சென்று சந்திப்புகளை மேற்கொண்டுவருவதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்தில் எழுக தமிழ் ஏற்பாட்டுக்குழுவினரால் சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில்,

பள்ளிக்குடா க.தொ.கூ. சங்கம், பூநகரி க.தொ.கூ.சங்கங்களின் சமாசம் (16 சங்கங்களை உள்ளடக்கியது), கிளிநொச்சி மாவட்ட சமூகமட்ட அமைப்புகளின் சம்மேளனம் (72 அமைப்புகளை உள்ளடக்கியது), திருநகர் பகுதிவாழ் சமூக செயற்பாட்டாளர், கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கம், கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்கள், கண்டாவளை க.தொ.கூ.ச.சமாசம் (5 சங்கங்களை உள்ளடக்கியது), கிளிநொச்சி மாவட்ட க.தொ.கூ.ச. சமாசங்களின் சம்மேளனம் (25 சங்கங்களை உள்ளடக்கிய 3 சமாசங்களுக்கானது), பூநகரி வர்த்தகர் சங்கம், கிளிநொச்சி மாவட்ட வர்த்தக விவசாய கடற்றொழில் சம்மேளனங்களின் இணையம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணி குறித்த தகவல்கள் வழங்கப்பட்டதுடன் பளை க.தொ.கூ.சங்கங்களின் சமாச (4 சங்கங்களை உள்ளடக்கியது) நிர்வாகத்தினருடன் மேற்குறித்த விடயம் குறித்து தொலைபேசியில் உரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட கள்ளியடி, இலுப்பைக்கடவை, அந்தோனியார் புரம் மற்றும் மூன்றாம்பிட்டி ஆகிய பகுதிகளில் மக்கள் சந்திப்புகள் மூலம் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட சமூக செயற்பாட்டாளர்கள் குழுவொன்று தன்னார்வமாக முன்வந்து இந்த பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.(9)



சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் றஜீவின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மடு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இரணை இலுப் பைக்குளம் கல்மடு படிவம்- 2 பிரதேசத்தில் வசிக்கும் தந்தை காணாமல் போய் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவி ஒருவருக்கு வெளிச்சம் அறக் கட்டளையின் ஏற்பாட்டில் பூமணி அம்மா அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் ஐங்கரனுடைய நிதிப் பங்களிப்புடன் துவிச் சக்கர வண்டி கடந்த வாரம் வழங்கி வைக்கப்பட்டது.




# திருச்சபையினர் சந்திப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள றோமன் கத்தோலிக்கம் அல்லாத திருச்சபையினர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சிவமோகனைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு கைவேலியில் அமைந்துள்ள தமிழரசு கட்சியின் காரியாலயத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான திருச்சபையை சார்ந்த பாஸ்டர்கள் கலந்து கொண்டு கருத்துக்களையும் பிரச்சினைகளையும் தெரிவித்தனர்.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகளில் தாங்கள் ஓரங்கட்டப்படுவதாக தெரிவித்த அவர்கள் குறிப்பாக தங்களது சமயம் சார்ந்த பாட ஆசிரியர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்டவில்லை.

தங்களது திருச்சபையில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் . அவர்களை தொண்டர் ஆசிரியராக உள்வாங்குவதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.(9-350)

# சட்டத்துக்கு முரணாக அனுமதி பெற்று அழிக்கப்படும் முல்லை. இயற்கை வளங்கள்

## தடுத்து நிறுத்துமாறு பொது அமைப்புக்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயற்கைச் சூழலைப் பாதிக்கும் வகையில் இயற்கை வளங்கள் வகைதொகையின்றி அழிக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வட பகுதியின் அதிகளவான இயற்கை வளங்களைக் கொண்ட பகுதியாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டின் பின்னர் இங்குள்ள வளங்கள் வகை தொகையின்றி அழிக்கப்படுகின்றன. அதாவது சட்டத்திற்கு முரணான வகையில் மணல், கிரவல் அகழ்வுகள், காடழிப்புக்கள் என பெறுமதி வாய்ந்த வளங்கள் அழிக்கப்படுகின்றன.

இதனைவிட முறையற்ற விதத்திலான அனுமதிகள் வழங்கப்பட்டும் இவ்வாறு வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்றும் இதனை தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரவல் அகழ்வுகள், மணல் அகழ்வுகளுக்கான அனுமதிகள் மாவட்டத்தை சேர்ந்த தனி நபர்களுக்கோ அல்லது அமைப்புக்களுக்கோ வழங்கப்படாது தென் பகுதியைச் சேரந்தவர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றது.

ஒட்டுசுட்டான், துணுக்காய் போன்ற பகுதிகளிலும் பெருமளவான கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட வவுனிக்குளம் மற்றும் ஏனைய குளங்களுக்கு நீரைச் சேர்க்கும் ஆறுகள் துண்டாடப்பட்டு மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான அனுமதிகள் யாவும் தென்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெருமளவான வளங்களை அழிக்கும் வகையில் முறையற்ற விதத்தில் வழங்கப்பட்ட அனுமதிகளால் வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை உரிய அதிகாரிகள் கவனத்திற் கொண்டு இவ்வாறான அனுமதிகளை கிராமமட்ட அமைப்புக்களுக்கு வழங்கி வளங்களை பாதுகாக்க உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்பொதுமக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. (9-315)

# முல்லை. பாலைப்பாணி கிராமத்துக்கான பிரதான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாலைப்பாணி கிராமத்திற்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமை, போக்குவரத்து வசதியின்மை, தொழில் வாய்ப்பின்மை என்பவற்றால் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படும் பாலைப்பாணி கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த காலயுத்தம் காரணமாக அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்து இந்தியாவின் தமிழகத்திற்கு சென்றுள்ளனர்.

யுத்தத்தின் பின்னரான மீள் குடியமர்வையடுத்து, மேற்படி



கிராமத்தில் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி ஒன்பது ஆண்டுகளாகிய நிலையிலும் மேற்படி கிராமத்திற்கான பிரதான வீதியாக காணப்படும் வன்னிவிளாங்குள்ம் மூன்றுமுறிப்பு வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன், மழைகாலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காண்ப்படுகின்றது.

இதனைவிட குறித்த கிராமத்தில் தினமும் காட்டுயானைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதுடன், பாலைப்பாணி கிராமத்தில் இருந்து வன்னிவிளாங்குளம் மற்றும் மாங்குளம் உள்ளிட்ட பாடசாலைகளுக்கு தினமும் ஒன்பது கிலோமீற்றர் தூரம் காட்டுப் பாதைவழியாக பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் யானைகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாகவும் கிராமமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிராமத்தில் வாழும் அனைத்து குடும்பங்களும் வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றன என்றும் தற்போது எந்தவித தொழில் வாய்ப்புக்களும் இன்றியே வாழ்ந்து வருவதாகவும் மேற்படி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.(9-315)

# மணல் கடத்தலை தடுத்து நிறுத்துமாறு முக்கொம்பன் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி -முக்கொம்பன் வீதி வழியாக சட்ட விரோதமாக மணல் கொண்டு செல்வதைத் தடுத்து நிறுத்துமாறு முக்கொம்பன் பொது அமைப்புகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளன. அக்கராயன், குடமுருட்டி ஆற்றுப்படுகைகளில் மணல் அகழப்பட்டு டிப்பர்களில் முக்கொம்பன் கிராமம் வழியாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்படுவதன் காரணமாக முக்கொம்பன் கிராமத்தில் இருந்து பூநகரி 10 ஆம் கட்டைசந்திவரை அமைக்கப்பட்டுள்ள கொங்கிறீட் வீதி நாள்தோறும் சேதமடைந்து வருகின்றது. இதற்கு காரணம் மணல் சுமையுடன் டிப்பர்கள் பயணிப்பதாகும். கிளிநொச்சி மாவட்டச் செயலகம் சட்டரீதியாக மணல் அனுமதி வழங்கி இருந்



தால் டிப்பர்களை மாற்றுவழிகளைப் பயன்படுத்தி மணலுடன் பயணிக்கச் செய்யலாம்.

ஆனால் அக்கராயன், குடமுருட்டி ஆற்றுப் படுகைகளில் நீண்ட காலமாக சட்டவிரோதமான முறையி லேயே மணல் அகழ்வு நடைபெறுவதன் காரணமாக எமது கிராமத்தின் வீதிசேதமடைந்து வருகின்றது.

முக்கொம்பன் கிராம வழியாக மணல் டிப்பர்களை பயணிப்பதைத் தடை செய்யுமாறும் முக்கொம்பன் பொது அமைப்புகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (9-350)

# 2020 இல் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வீதம் அதிகரிக்கப்படும்

## வடக்கு ஆளுநர் நம்பிக்கை






(யாழ்ப்பாணம்)

மூன்று சதவீதமாகவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வீதம் அடுத்த வருடம் அதாவது எதிர்வரும் 2020 ஜனவரி மாதம் முதல் 6 சதவீதமாக அதிகரிக்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

"எம் மத்தியில் வாழும் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகளும் வாய்ப்புக்களும்" என்ற தலைப்பில் யாழ்.பொது நூலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஐந்தாவது வடக்கு வட்டமேசை கலந்துரையாடலில் மாற்றுத்திறனாளிகள் சந்திக்கும் சவால்கள்,அவர்களது தேவைகள் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இதன்போதே ஆளுநர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இந்த வடக்கு வட்டமேசை கலந்துரையாடலில் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர், மாற்றுத்திறனாளிகள் சந்திக்கும் சவால்கள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துரைத்தார். இதன்போது அவர்களுக்கான சில தீர்வுகள் கலந்துரையாடலின் போதே ஆளுநரால் வழங்கப்பட்டது.

தற்பொழுது 3 சதவீதமாகவுள்ள மாற்றுத்திறன்ாளிகளுக்கான வேலைவாய்ப்பு அடுத்த வருடம் அதாவது எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 6 சதவீதமாக அதிகரிக்கப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான போக்குவரத்து வசதிகளும் அவர்களது தேவைகள் தொடர்பிலான அறிவுறுத்தல்களை திணைக்களத் தலைவர்களுக்கு வழங்கவுள்ளதாக ஆளுநர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# தடை தாண்டல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாகம் அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால் நடை அபிவிருத்தி அமைச்சால் முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகள் கொழும்பில் இடம்பெறவுள்ளன.

இலங்கை நிர்வாக சேவை, பொறியியல் சேவை, விஞ்ஞான சேவை, கட்டடக் கலைஞர் சேவை, கணக்காளர் சேவை மற்றும் திட்டமிடல் சேவையில் உள்ளவர்களுக்கே இப்பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை www.slida.lk என்ற இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை அறிய நேற்றைய தினம் வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 130 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 180 | 150 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 130 | 120 | 110 | 100 |
| கோவா | 80 | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 100 | 120 | 120 | 100 | 120 |
| பூசணி | 80 | 40 | 50 | 40 | 50 |
| புடோல் | 80 | 80 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 105 | 140 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 60 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 140 | 140 | 150 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 130 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 210 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 160 | 60 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 35-40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | — | — | — | 150 | 240 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 160 | 120 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 60 | 120 | 60 |

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1823

Search for people, places and things

### குவேனி

ஆளுக்கொரு வேசம், நேரத்திற்கொரு பேச்சு என்றிருப்பவர்கள்தான் வாழ்க்கையை மிக எளிதாக எதிர்கொள்கின்றனர்



### யாசிகா

சில சிக்கல்களை நாம் எதிர்கொள்ளும் போதுதான் கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன



### அனன்யா

மணமேடையை சுத்த முதன்முதலில் பிடிச்ச கையை கடைசிவரை விட்டுவிடாமல் வாழ்வதே ஆண்மகன் என்ற அர்த்தத்தை உணர வைக்கின்றது



### ருத்ரா

அடுத்தவர் கஷ்டத்தை விமர்சனம் செய்து வாழாதீர்கள்... உதவ முடியவில்லை என்றால் ஒதுங்கியிருங்கள்



### வினுயா

சோற்றை விட உப்பிற்கே மரியாதை அதிகம்... ஆனாலும் விரலளவிற்கு மேல் சாப்பிட முடியாது... "ஆடம்பரமும் அப்படித்தான்"



### கஸ்தூரி


அழகான பெண்தான் வாழ்க்கையை அழகாக்குவாள் என்று நினைக்கும் ஆண் முட்டாள்... அழகிருந்தால் போதும் ஆணின் அன்பைப் பெறலாம் என்று நினைக்கும் பெண் அடிமுட்டாள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# இன்றே செய்க!



நாகராஜனுக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை இருந்தது. ஆசை என்பது பொருத்தமான வார்த்தை இல்லை. ஆனால் இதைப் பற்றிப் பேசும்போதெல்லாம் நாகராஜன், 'எனக்கு ரொம்ப நாட்களாக ஒரு ஆசை' என்றுதான் சொல்வார்.

தான் படித்த பள்ளிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. தன்னுடைய கல்வியறிவு, பண்பாடு, முன்னேற்றம் இவற்றுக்கெல்லாம் தான் படித்த பள்ளிதான் அடித்தளம் அமைத்துக் கொடுத்தது என்ற நன்றி உணர்வு அவருக்கு எப்போதுமே உண்டு. அந்த நன்றியை வெளிப்படுத்தும் விதமாகப் பள்ளிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பது அவர் விருப்பம். ஆனால் என்ன செய்வது என்றுதான் தெரியவில்லை.

சில வருடங்களுக்கு முன் சொந்த ஊருக்குப் போன போது, தான் படித்த பள்ளிக்குச் சென்றார். அப்போது அங்கே தலைமையாசிரியராக இருந்தவரைச் சந்தித்துத் தன்னை ஒரு பழைய மாணவன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தபோது தலைமையாசிரியர் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

அந்தப் பள்ளி அரசு உதவி பெறும் தனியார் பள்ளி. அங்கே பத்தாம் வகுப்பு வரை கல்விக் கட்டணம் கிடையாது. ஆனால் பதினொன்றாம் வகுப்புக்கும் பன்னிரண்டாம் வகுப்புக்கும் கல்விக் கட்டணம் உண்டு.

மிகக் குறைந்த கட்டணம்தான் என்றாலும் அங்கே பத்தாவது வரை படித்த மாணவர்கள் பலருக்கு அந்தக் கட்டணத்தைக் கூடக் கட்டிப் படிக்கும் வசதி இல்லை என்பதால் பலர் பத்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்தி விடுவதாகச் சொன்ன தலைமை ஆசிரியர், அவரைப் போன்ற பழைய மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை நன்கொடையாக அளித்தால், அதை வங்கியில் நிரந்தர வைப்புக் கணக்கில் போட்டு அதிலிருந்து வரும் வட்டி மூலம் சில ஏழை மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அதிலிருந்து பெறலாம் என்றார். தன்னால் முடிந்ததைச் செய்வதாகச் சொல்லிவிட்டு நாகராஜன் ஊர் திரும்பினார்.

தான் தொடர்பு வைத்திருக்கும் பள்ளித் தோழர்களை அணுகி இது பற்றிப் பேசினார். அவர்கள் யாரும் இதில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. தன் சொந்த முயற்சியில் ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்தார். அவரது பொருளாதார நிலை ஒன்றும் அவ்வளவு சிறப்பாக இல்லை. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தே இருந்தார். மாதாமாதம் ஒரு சிறு தொகை சேமித்துப் பார்த்தார். அது போதாது என்று தெரிந்தது.

இந்நிலையில் அவரது ஒரே மகனின் படிப்பு முடிந்து அவனுக்கு மிக நல்ல வேலை கிடைத்தது. சில மாதங்கள் கழித்து, வேலையில் அவன் நிலை பெற்ற பிறகு அவனிடம் தன் ஆசையைச் சொன்னார்.

"அப்பா! நான் இப்பதான் வேலையில் சேர்ந்திருக்கேன். என்னால இப்ப எதுவும் செய்ய முடியாதே!" என்றான்.

"நீ ஒண்ணும் செய்ய வேண்டாம். நீ இப்ப உன் சொந்தக் கால்லில் நிக்கின்றாய். நான் ரிடையர் ஆனதும் வரும் பி.எஃப்ப் பணம் எனக்கும் உன் அம்மாவுக்கும் போதும். இதைத் தவிர, நான் வாலண்டரி பி.எஃபில் கொஞ்சம் பணம் போட்டுட்டு வந்திருக்கேன். அதில ஒரு ஐந்து இலட்சம் ரூபாய் வரும். அதை நான் என் பள்ளிக்கூடத்துக்குக் கொடுக்கலாம்னு நினைக்கிறேன். அதில் உனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லையே?" என்றார்.

"அப்பா. அது உங்க சேமிப்பு. நீங்க எப்படி வேண்டுமென்றாலும் பயன்படுத்துங்கள். உங்க சேமிப்புப் பணம் எதையும் நான் எதிர்பார்க்கவில்லை! காலம் முழுக்க உங்களைப் பாத்துக்கறது என்னோட பொறுப்பு" என்றான். "எதையும் நல்லா யோசனை பண்ணிச் செய்யுங்க" என்றாள் அவர் மனைவி.

நாகராஜன் அலுவலகத்தில் பேசித் தனது வி.பி.எஃப் சேமிப்பில் இருந்த ஐந்து இலட்சத்து சொச்சத்தைப் பெற்றார்.

பள்ளித் தலைமை ஆசிரியருக்குத் தொலைபேசியில் விடயத்தைச் சொன்ன போது அவர் மகிழ்ந்து, அன்றைய கட்டணங்களின் அடிப்படையில் ஐந்து லட்சம் ரூபாயை நிரந்தர வைப்பில் போட்டால், அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நான்கு மாணவர்களுக்குக் கட்டணம் செலுத்த முடியும் என்றார். அடுத்த நாள் வங்கியில் டிமாண்ட் டிராஃப்ட் எடுத்து அனுப்புவதாகச் சொன்னார் நாகராஜன்.

அன்று இரவு நாகராஜனுக்கு திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அடுத்த நாள் நினைவு திரும்பியதும், நாகராஜன் மகனிடம் முதலில் கேட்டது பாங்க் டிராஃப்ட் எடுப்பதைப் பற்றித்தான்.

"அதற்கென்ன அப்பா? நீங்கள் குணமாகி வீட்டுக்கு வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் அவர் மகன்.

"நல்ல காரியங்களைத் தள்ளிப் போடக்கூடாது. நான் ஏற்கெனவே ரொம்ப டிலே பண்ணிட்டேன்னு நினைக்கிறேன். நான் செக்குல கையெழுத்துப் போடுகின்றேன். நீ வங்கியில் போய் டிடி வாங்கி இன்னைக்கே கூரியர்ல அனுப்பிடு!" என்றார்.

டிடி எடுத்து அதைப் பள்ளிக்கு கூரியரில் அனுப்பி விட்டதாக அன்று பிற்பகல் அவரிடம் சொன்னான் அவர் மகன். அதைக் கேட்டதுமே அவர் முகத்தில் ஒரு தெளிவு பிறந்தது. உடல் நிலை சரியாகி விட்டது போல் இருந்தது.

அன்று இரவு நாகராஜன் மருத்துவமனையில் இறந்து போனார்.

**குறள் 36:**

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

**பொருள்:**

பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் நற்செயல்களைச் செய்ய வேண்டும். ஒருவர் மறைந்த பிறகு கூட, அவர் செய்த நற்செயல்கள் அவருக்கு அழியாத புகழைத் தரும்.

## பொது அறிவு வினா விடை

- உலகில் நூறு வருடங்களுக்கு மேல் உயிர் வாழும் உயிரினம் எது?
  **ஆமை**
- நட்சத்திரத்தின் ஆயுட்காலம் எத்தனை ஆண்டுகள்?
  **10 மில்லியன் ஆண்டுகள்**
- உப்பை அதிகமாக விரும்பி சாப்பிடும் விலங்கினம் எது?
  **முள்ளம் பன்றி**
- உலகிலேயே அதிக தபால் நிலையம் உள்ள நாடு எது?
  **இந்தியா**
- உலகில் தாய்மொழி இல்லாத நாடு எது?
  **சுவிட்சர்லாந்து**

## சிந்தனைத்துளிகள்

- சிலந்தியின் தன்நம்பிக்கையைப் பார்... அது அன்னியப் பொருட்களால் வீடு கட்டாது, தன் எச்சிலால் மட்டுமே வீடு கட்டும்.
- குருடர்கள் வாழும் ஊருக்கு தெரு விளக்கு எதற்காக..
- உலகத்தை வரையலாம் ஆனால் உள்ளத்தை வரைய முடியாது.
- அரசியலில் ஈடுபடாதே ஈடுபட்டால் அதுதான் உனக்கு செத்தவீடு
- எதிர் காலம் உங்கள் கையில் என்ற முழக்கம் கேட்டு மயங்கும் இளைஞன் நிகழ்காலம் கிழவர்களின் கைகளில் என்பதை அறிய மறக்கிறான். எதிர்காலம் கைக்கு வராமல் கானல் நீராகப் போக காலகாலமாக உலகம் முதியவரிடமே சிக்குண்டு கிடக்கிறது.

# எல்லா சமூகத்தினரையும் திருப்திப்படுத்தும் வகையிலேயே பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும்

## தென்னாபிரிக்க அருட்தந்தை மைக்கல் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களையும் திருப்திப்படுத்தும் வகையிலேயே பிரச்சினைகளுக்கான தீர்வுகள் காணப்படவேண்டும். அத்தகையதோர் தீர்வுகள் கிடைக்கப்பெற்றால் மாத்திரமே இனங்களிடையே ஐக்கியத்தினை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்த நினைவுகளை குணப்படுத்தும் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை மைக்கல் லப்ஸ்லி உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் போது உயிரிழந்த மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்தார்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைப் பரப்பும் வகையில் தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கை வந்துள்ள அருட்தந்தை மைக்கல் லப்ஸ்லி எதிர்வரும் 18 ஆம் திகதிவரை குண்டுத்தாக்குதலின் போது பாதிப்புக்குள்ளான மக்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.



இதேவேளை, சர்வமதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களையும் சந்தித்து நாட்டின் நிலவரம் குறித்து கலந்துரையாடுவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர் தெரிவித்ததாவது,

இலங்கையில் பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மதங்களைச் சேர்ந்தவர்களிடையே ஒரு இணக்கப்பாடு வருவது பிரச்சினையின் தீர்விற்கு அடிப்படையானதாகும்.

எனது 2017 விஜயத்தின் பின்னர் அண்மையில் இலங்கையில் ஏப்ரல் 21 தினப்பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களையும் பிரதிபலித்தே தீர்வுக்கு நாங்கள் முயல வேண்டும். எனவே, இனங்களிடையே ஐக்கியத்துவம் ஏற்படுத்தப்படவேண்டும். இவ்விடயம் இலங்கைக்கு மட்டுமல்ல முழு உலக நாடுகளுக்கும் ஏற்புடையதாகும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

# மருந்துத் தட்டுப்பாடில்லை

## மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் மறுப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறும் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் எந்த வைத்திய சாலையிலும் அவ்வாறான மருந்துத் தட்டுப்பாடு நிலவவில்லை.

அவர்கள் குறிப்பிடும் வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் இவ்வாறானதொரு முறைப்பாட்டை எம்மிடத்தில் முன்வைக்கவில்லை என்று சுகாதார அமைச்சின் மருந்துப் பொருள் விநியோக பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ரி. சுதர்சன மறுப்புத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள எந்த வைத்திய சாலையிலேனும் மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில் அந்தக் குறைபாட்டை உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கு அமைவாக திட்டமொன்றை வகுத்துள்ளதாகவும் முன்னர் காணப்பட்ட முறைமைக்கு மேலதிகமாக இந்த முறைமையை அமுல்படுத்தியுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் டீ.ஆர்.கே. ஹரத் இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# அநுராதபுரம் சிறைச்சாலையில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தை புனரமைக்க நிதியுதவி




(அநுராதபுரம்)

அநுராதபுரம், சிறைச்சாலையில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தைப் புனரமைக்க சிவன் அறக்கட்டளையின் ஸ்தாபகரும் மக்கள் முன்னேற்றக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான கணேஸ்வரன் வேலாயுதம் நிதியுதவி வழங்கினார்.

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக கணேஸ்வரன் வேலாயுதம் அண்மையில் சென்றிருந்தார்.

இதன்போது அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தேவையான பொருட்களை அவர்களிடம் வழங்கியதுடன் சிறைச்சாலையிலுள்ள பிள்ளையார் ஆலயத்தைப் புனரமைப்பு செய்து தருமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்த நிலையில் 40 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கினார். இதன்போது சிவன் அறக்கட்டளை இணைப்பாளரும் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினருமான க.சதீஸ் உடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-299)

# உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் சி.ரி.ஐ.டியிடம் கையளிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கியமை உள்ளிட்ட பிரதான மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ், சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஜமாத் இஸ்லாமி அமைப்பின் முன்னாள் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் சி.ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டார்.

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மை தொடர்பில் உறுதி செய்யவும் முறையான விசாரணை ஒன்றினை முன்னெடுக்கும் முகமாகவும் அவர் இவ்வாறு பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ)

# பெக்கோ இயந்திரத்தில் சிக்குண்ட ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு!

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலப்பிட்டி கிரிமிட்டிகம திஸ்பனகந்த பகுதியில் பெக்கோ இயந்திரத்தில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெக்கோ இயந்திரத்தை திருத்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பெக்கோ இயந்திரத்தின் ஒரு பகுதி திடீரென விழுந்ததில் குறித்த நபர் சிக்குண்டு ஸ்தலத்திலையே பலியாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது. (இ-7)

# அமைச்சர் சஜித் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அன்றையதினம் யாழ்.மாநகரசபை மைதானத்தில் நடைபெறும் "என்ரபிறைஸ் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சியில் கலந்து கொள்வதுடன் ஊரெழு பொக்கணை கிராமத்திலும் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலும் இடம் பெறவுள்ள வீட்டுத்திட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்விலும் கலந்துகொள்வார்.(இ-2-10)

# பயங்கரவாதத் தாக்குதலின் எதிரொலி

## நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணி காலதாமதம்

(கொழும்பு)

2018 ஒக்டோபர் அரசியல் நெருக்கடி, பயங்கரவாதத்தாக்குதல் சம்பவங்கள் போன்றவற்றால் அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணிகளில் 5 மாத காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அந்த வீதிப் பணிகளை அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் நிறைவு செய்ய முடியும் என்று நம்புவதாகவும் கிராமப்புற வீதிகளின் அபிவிருத்திக்கென்று ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இதுவரையில் 170 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைத்துள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிஹால் சூரியாராச்சி தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,



கடந்த வருடத்தின் இறுதியில் இடம்பெற்ற அரசியல் நெருக்கடி நிலைமை மற்றும் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல் சம்பவங்களின் காரணமாக மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணிகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதன் காரணமாக இந்த அபிவிருத்திப் பணிகள் 5 மாத காலம் தடைப்பட்டிருந்தது. இந்த கால தாமதம் இடம்பெற்றிருக்காவிட்டால் இந்த நவம்பர் மாதம் ஆகும் போது அந்த அதிவேக நெடுஞ்சாலைகளை மக்களின் பாவனைக்கு கையளித்திருக்க முடியும் எனச் சுட்டிக்காட்டினார். (ஜ)

சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு செய்தால் எந்த வேலையும் மிகக் கடினமாக இருக்காது.

– ஹென்றி போர்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் தார்மீகக் கடமை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கள் தமிழ் இனத்தின் மிகப்பெரும் சொத்து.

இதை நாம் கூறும்போது, இதற்குள் இனப் பாகுபாடு உண்டெ‌ன யாரும் கருதிவிடக் கூடாது.

ஏனெனில் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல்கள் எங்கள் இனத்தின் கல்விக்கு மிகப்பெரும் கேடு விளைவித்தன.

இதன்காரணமாக அன்றைய தமிழ் இளைஞர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியாமல் போயிற்று.

அதன் விளைவுகள் எப்படியாயிற்று என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தேவை இல்லை.

இவை ஒருபுறமிருக்க, சேர் பொன். இராமநாதன் பிரபு ஆரம்பித்த திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி தன்னைத் தானமாக்கி யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைவதற்கு வித்திட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக தமிழ் மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற சந்தர்ப்பம் ஏற்படலாயிற்று.

மீத்திறன் மாணவர்களை ஓரங்கட்டி, தரப்படுத்தலை அமுலாக்கி தமிழ் மாணவர்களின் பட்டப்படிப்புக்குப் பாதகம் இழைக்கப்பட்டபோது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழினத்தின் கல்வியைத் தாங்கி நிற்கின்ற உயர் கலாபீடமாக நிமிர்ந்து நின்றது.

வேந்தர், துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், கலைவிஞ்ஞான விவசாய மருத்துவபீடங்கள் என்பதான கட்டமைப்பு தமிழ் மண்ணில் உருவானது.

இதற்கு மேலாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் கல்வியாளர்களும் பல்கலைக்கழக சமூகமும் தமிழினத்துக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டிக்கவும் எதிர்த்துக் குரல் கொடுக்கவும் பின்னிற்கவில்லை.

அதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழினம் துன்பப்பட்டபோதெல்லாம் வீதியில் இறங்கி உதவிக்கரம் நீட்டியதை நெகிழ்வோடு பார்க்கின்ற மிக உயர்ந்த பண்பாடு இன்னமும் தமிழ் மக்களிடம் உண்டு.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எந்த மாணவர்களும் கற்கலாம், பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம், ஆய்வு செய்யலாம்.

ஆனால் அது தமிழர்களின் தனித்துவமான சொத்து என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

எனவே எங்கள் பல்கலைக்கழகம் என்ற உணர்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற ஒவ்வொரு தமிழ் மாணவர்களிடமும் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில், எதிர்வரும் 16ஆம் திகதி மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கான உத்வேகத்தை; தமிழ் மக்களை அணி திரட்டுகின்ற பெரும் பணியை எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் செய்ய வேண்டும்.

எம் தமிழினம் வாழ்வதற்கான எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை சர்வதேசம் திரும்பிப் பார்க்க வேண்டும்.

இதற்காக எங்கள் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழர் தாயகம் எங்கும் சென்று பெரும் பிரசாரம் செய்து எம் தமிழினத்தின் ஒற்றுமையை, எங்கள் உரிமையை வலிமைப்படுத்த வேண்டும்.

## பலாலி விமான நிலைய அபிவிருத்திக்கென சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு விரைவாக நட்டஈடு வழங்கப்பட வேண்டும்

### டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலைய அபிவிருத்திக்கென காலா காலமாக சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு விரைவாக நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலாலி விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிக்கென 1984ஆம் ஆண்டு 397 உரிமையாளர்களது 64 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டதாகவும், இவர்களுக்கான இழப்பீடுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

1950 - 1960 ஆண்டுகாலப் பகுதியில் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களின் இழப்பீடுகள் வழங்கப்படாத 501 உரிமையாளர்களது உரித்தாளர்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்கு அதற்குரிய உறுதிப்படுத்தல்கள் இல்லாத நிலையில் இருக்கின்றமையால் இவர்கள் அந்த இழப்பீடுகளைப் பெறமுடியாதுள்ளனர்.

அத்துடன்1984ஆம்ஆண்டு சுவீகரிக்கப்பட்ட 64 ஏக்கர் காணிகளின் உரிமையாளர்களான 397 பேருக்கும் அதற்கான இழப்பீடுகள் வழங்கப்படாதுள்ளன.

பல தசாப்தங்கள் கடந்துள்ள நிலையில் குறித்த காணி சுவீகரிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இறந்துள்ள நிலையில் அவர்களது வம்சாவளியினர் தமது பூர்வீகக் காணிகளுக்கான நட்ட ஈடுகளை பெற்றுக் கொள்வதில் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் நீண்ட காலமாக இழப்பீடுகள் கிடைக்காதிருக்க காரணம் துறைசார் தரப்பினரது உரிமங்களை அடையாளங் காண்பதற்கு தற்போதுள்ள சந்ததியினரால் முடியாதுள்ளமையும் அதற்கு அதிகாரிகள் அக்கறை காட்டாமையுமே காரணமாக இருப்பதாக தெரிய வருகின்றது.

அந்தவகையில் குறித்த தரப்பினரது காணிகளை அடையாளம் காண்பதற்கு துறைசார் அதிகாரிகள் அக்கறை செலுத்துவதுடன் அதனைத் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மின்சார சபை தனியார் மயமாக்கப்படாது

### அமைச்சர் ரவி கருணாநாயக்க உறுதி

இலங்கை மின்சார சபை தனியார் மயமாக்கப்படாது என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றுஉரையாற்றிய போதே மின், எரிசக்தி மற்றும் வணிக மேம்பாட்டு அமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டுக்காக ஆற்ற வேண்டிய பல கடமைகள் உள்ளன. அவை அடையாளம் காணப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் அது பாரிய பிழையாக அமையும்.

'நாம் நிதி ரீதியாக ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். இலங்கை மின்சார சபையின் செலவு மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகள் குறித்து கருத்தில் கொள்ள வேண்டும். நல்ல ஒரு பெயரை உருவாக்கிய இலங்கை மின்சார சபை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இலங்கை மின்சார சபை என்பது இந்த நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனமாகும்.

பல்வேறு தடைகள் இருந்தாலும், அவற்றைக் கடந்து நாம் முன்னேற வேண்டும். மின் தடை என்பது நாட்டுக்கு ஒரு பெரிய பிரச்சினையாகும். ஒரு மின்பிறப்பாக்கி பழுதானால் முழு அளவில் மின்சாரம் முடக்கப்படும் என்று நாம் அஞ்சுகின்றோம்.

போட்டியின் மூலம் ஒரு நாட்டை உருவாக்க முடியும். எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கும் கருத்து எந்த அரசியல் கட்சிக்கும் சாத்தியமற்றது.

உற்பத்தி செலவுகளை நாம் தொடர்ந்து குறைக்க வேண்டும். எனவே, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டியது அவசியம். இது நாட்டின் விரைவான வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும்.

என்னை மாபியாவுக்குள் தள்ள சிலர் முயற்சிக்கின்றனர். இந்த விடயங்களைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இதைச் செய்வதற்கான சிறந்த வழி புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறுவதுதான். முடிந்த வரை புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நாம் சேகரிக்க வேண்டும். இன்று சுமார் 22 பில்லியன் மின்சார தேவை உள்ளது. இருப்பினும், எங்களால் அதனைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இது நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு தடையாகும்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யோகா புதிய பயிற்சி நெறிகள் நல்லூர்த் தேரடி அருகே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். யோகா உலகம் அமைப்பு நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது.

இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு நாளை 08.09.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் சி.உமா சுதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி கே.கேதீஸ்வரன் பிரணாயாமத்தின் முக்கியத்துவம் என்னும் தொனிப்பொருளிலும் வைத்திய கலாநிதி திருமதி திருமகள் சிவசங்கர் யோக மருத்துவம் எனும் விடயம் பற்றியும் சிறப்பு விரிவுரைகளை வழங்குவர்.

யோகா உலகம் அமைப்பின் மாணவர்களின் யோக அசைவுகளும் நடைபெறும். தொடர்ந்து யோகா வகுப்புக்கள் திங்கட்கிழமை தொடக்கம் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணி வரை இரு பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிரணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள், அத்துடன் முத்திரைப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசான்களால் நுணுக்கமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு மருத்துவர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொள்வது பயனுடையது. ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறியில் இணைந்து பயனடைய முடியுமென்று யாழ். யோகா உலகம் அறிவித்தது. (இ)

## சஹ்ரானின் மடிக்கணனியிலிருந்து சிக்கிய முக்கிய ஆதாரங்கள்

தொடர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான மொஹமட் சஹ்ரான் பயன்படுத்திய மடிக்கணனியிலிருந்து முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அதனடிப்படையில் விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வு பிரிவின் டிஜிற்றல் பகுப்பாய்வு அறையில் குறித்த கணனி வைக்கப்பட்டு, விசேட பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, பல்வேறு தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் எப்.பி.ஐ எனப்படும் மத்திய விசாரணைப் பிரிவினரால் இந்த கணனி எடுத்துச் செல்லப்பட்டதாக சிலர் கூறி வருவதில் எந்தவொரு உண்மையும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

சஹ்ரானின் கல்முனை பகுதி தொடர்பாளராக செயற்பட்ட சியாம் என அறியப்பட்ட சாவுல் ஹமீட் ஹமீஸ் என்பவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து, பெறப்பட்ட தகவல்களுக்கமையவே கடந்த மே 31 ஆம் திகதி குறித்த கணனி மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கற்றல் வள நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாண்ம்)

கல்வி அமைச்சால் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் உசன் இராமநாதன் ம்கா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான புதிய கற்றல்வள நிலையத் திறப்பு விழா நாளை மறுதினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்வார். (இ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- அன்பே வாழ்வின் அடிப்படை ஆதாரம். ஆனால், மனிதனோ வெறுப்புணர்வால் உலகை நரகமாக்குகிறான்.
- மற்றவரை அடிப்பது எளிது. ஆனால், அடிக்காமல் அடங்கி இருப்பது கடினமானது.
- ஒருவனிடத்தில் மறைந்திருக்கும் சக்தியை வெளிப்படுத்தும் செயல் தான் புண்ணியம்.
- மனம் விரும்பிய செயலில் நீங்கள் ஈடுபடுவது போல பிறரையும் சுதந்திரமாக செயல்பட அனுமதியுங்கள்.
- மனம் தான் உலகமாக விரிந்திருக்கிறது. எதையும் சரியாகப் பார்க்கக் கற்றுக் கொள்வது அவசியம்.

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பளுதூக்கல் போட்டி பதக்கங்கள் குவித்தது யாழ். பல்கலைக்கழக அணி



இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பெண்களிற்கான பளுதூக்கல் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகம் மூன்று முதலாம் இடத்தையும் ஐந்து இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டிகள் றுகுணு பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணி சார்பாக 45 கிலோ நிறைப் பிரிவில் எஸ். பிரியங்கா, 59 கிலோ நிறைப் பிரிவில் வி.அன்னலட்சுமி, 76 கிலோ நிறைப் பிரிவில் ஆர்.தசாங்கினி ஆகியோர் முதலாம் இடத்தையும், 71 கிலோ நிறைப் பிரிவில் ஜி.ராஜனா, 76 கிலோ நிறைப் பிரிவில் ஆர்.எம்.பி.எம்.சண்டநாயக்க, 87 கிலோ நிறைப் பிரிவில் ஜெ.கஸ்தூரி, 87கிலோவுக்கு மேற்பட்ட பிரிவில் எம்.பிரிந்தா ஆகியோர் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். (க)

# அரையிறுதிக்கு தகுதி பெற்றது ஊரெழு றோயல் அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளாலும் எதுவித கோல்களையும் பதிவு செய்ய முடியாது போக வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:02 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.(க)

# ஆர்ச்சர் உங்களிடம் பாஸ்போர்ட் இருக்கா?

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் நான்காவது போட்டியில் இங்கிலாந்து வீரர் ஆர்ச்சரிடம் அவுஸ்திரேலிய ரசிகர்கள் அநாகரிகமாகக் கேள்வி கேட்டது தற்போது தெரியவந்துள்ளது.

அவுஸ்திரேலியா அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் இரு அணிகளுக்கிடையேயான நான்காவது டெஸ்ட் போட்டி கடந்த நான்காம் திகதி தொடங்கியது.

இதில் முதல் இன்னிங்ஸ் ஆடிய அவுஸ்திரேலியா அணியில் ஸ்டீவ் ஸ்மித் அபாரமாக ஆடி இரட்டைச்சதம் அடிக்க, அந்த அணி 8 விக்கெட் இழப்பிற்கு 497 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

அதன் பின் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 23 ஓட்டங்கள் எடுத்தது.

இந்நிலையில் இப்போட்டியின் முதல் நாள் முடிவில் வீரர்கள் தங்களின் அறைக்குச் சென்று கொண்டிருந்த போது, அப்போது அங்கிருந்த இரண்டு ரசிகர்கள் ஆர்ச்சர், உங்களுடைய இங்கிலாந்துக்கான பாஸ்போர்ட்-ஐ காட்டுங்கள் என கூச்சலிட்டனர்.

இதனால் ஆர்ச்சர் கடும் கோபம் அடைந்தார். அதன் பின் அது யார் என்று விசாரித்த போது, அவர்கள் அவுஸ்திரேலியா ரசிகர்கள் என்பது தெரியவந்து. அவர்கள் உடனடியாக மைதானத்தில் இருந்து வெளியேற்றப் பட்டனர். (க)

# அரையிறுதிக்குள் நுழைந்தது மயிலங்காடு ஞானமுருகன் அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளாலும் எதுவித கோல்களையும் பதிவு செய்ய முடியாது போக வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 03:00 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

# இந்திய அணி வீரர்கள் எனக்கு மரண பயத்தைக் காட்டினர்

## பிரெட் லீ தெரிவிப்பு



இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் தனக்கு மரண பயத்தை காட்டியதாக, அவுஸ்திரேலிய ஜாம்பவான் பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் உலகில் அனைத்து துடுப்பாட்ட வீரர்களையும் தனது அதிவேக பந்துவீச்சால் திணறடித்தவர் பிரெட் லீ. அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான இவர், குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்தில் உள்ள கல்லூரியில், காது கேட்பு செயல்திறன் குறை குறித்தான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அப்போது அவர் இந்திய கிரிக்கெட் வீரர்கள் குறித்து பேசினார். அவர் கூறுகையில், 'தற்போதைய கிரிக்கெட் உலகில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா மிகவும் சிறப்பாக செயற்பட்டு வருகிறார்.

பும்ராவை பொறுத்தவரை அவர் இந்த சகாப்தத்தின் சிறந்த வேகப்பந்து வீச்சாளராகவும், வேகப்பந்து வீச்சு அரசர்களின் அரசராகவும் திகழ்கிறார்.

இந்திய வீரர்களில் சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ். லட்சுமணன், டிராவிட் மற்றும் மகேந்திர சிங் டோனி ஆகிய வீரர்களுக்கு பந்துவீசுவது மிகவும் கடுமையான செயல். ஆனால், பொதுவாக இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அனைவருக்கும் எனக்கும் மரண பயத்தை ஏற்படுத்தினர்' என தெரிவித்துள்ளார். (க)

# அணித் தலைவராக முதல் போட்டியில் அரைச்சதம் அடித்த ரஷித் கான்



இளம் அணித்தலைவர் ரஷித் கானின் தலைமையில் களமிறங்கியுள்ள ஆப்கானிஸ்தான் அணி, பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்டில் 342 ஓட்டங்கள் குவித்துள்ளது.

பங்களாதேஷ்-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி, நேற்று முன்தினம் தொடங்கியது.

இளம் வீரர் ரஷித் கான் ஆப்கானிஸ்தானின் அணித் தலைவராக பொறுப்பேற்றார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய அந்த அணியில், சிறப்பாக விளையாடிய ரஹ்மத் ஷா தனது முதல் டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார். அவர் 102 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து அஸ்கார் ஆப்கன் அரைச்சதம் விளாசி, 8 ஓட்டங்களில் சதத்தை தவற விட்டார். அஃப்சர் ஷஷய் 41 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, பொறுப்புடன் ஆடிய அணித் தலைவர் ரஷித் கான் அரைச்சதம் விளாசினார்.

கடைசி விக்கெட்டாக ஆட்டமிழந்த அவர், 61 பந்துகளில் 3 சிக்சர், 2 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்கள் எடுத்தார். முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 342 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பங்களாதேஷ் அணி தரப்பில் இஸ்லாம் 4 விக்கெட்டுகளையும், ஷாகிப் அல் ஹசன் மற்றும் நயீம் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (க)

## சொகுசு பஸ் -...

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனை மோதித் தள்ளியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 28 வயதான பளை வேம்பொடுகேணிப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரஜிதரன் என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## வாள்வெட்டுக் -...

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோண் டாவில் உப்புமடம் பிள்ளையார் கோவில் பகுதியில் உள்ள இரும்பகத்திற்குள் நேற்று மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவர் மோட்டார் சைக்கிளில் சென்று உரிமையாளருடன் தகராறில் ஈடுபட்டதுடன், இரும்பகத்தில் இருந்த கொட்டனால் தாக்கியுள்ளார்கள்.

தாக்குதலில் படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சி.சி.ரி.வி காணொளி மூலம் தாக்கியவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,10)

## கோதுமை மா...

துள்ளது.

இதன்படி கோதுமை மாவின் ஒரு கிலோவின் விலை 5.50 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த அதிகரிப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, 450 கிராம் நிறையுடைய பாணின் விலையை 2 ரூபாயினால் அதிகரிக்கவுள்ளதாக அனைத்து இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பை தொடர்ந்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அனைத்து இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

பாணின் விலையை மாத்திரம் அதிகரிக்க முடிவு செய்துள்ள போதும் ஏனைய வெதுப்பக உணவுப் பொருட்களில் மாற்றம் எதுவும் மேற்கொள்ள தீர்மானிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## ரணில் - சஜித்...

நடைபெறவுள்ளது.

இவர்கள் இருவர் மட்டும் தனித்து இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை இந்த சந்திப்பு தொடர்பாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 24 குழுக்கள்...

வட மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்த வட மாகாண சுகாதார உதவியாளர் நேர்முகத்தேர்வில் குறைபாடுகள் இருந்ததை உறுதி விடுக்கப்பட்ட நிலையில் குறித்த நியமனத்திற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் மூன்று வாரத்துக்குள் நடத்தி முடிக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

முன்னர் நடைபெற்ற நேர்முகத்தேர்வில் இடம்பெற்ற அசௌகரியங்களை போக்கும் வகையில் 24 குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் தகுதிவாய்ந்த மூன்று அதிகாரிகள் நியமிக்கப்படுவதுடன் நாள் ஒன்றுக்கு ஒரு குழுவிற்கு ஆகக் கூடுதலாக 40 விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்வுகாக அழைக்கப்படுவர்.

அது மட்டுமல்லாது குறித்த நேர்முகத் தேர்வைக் கண்காணிப்பதற்காக பங்கு பற்றும் விண்ணப்பதாரிகளின் சிபாரிசுக்கு அமைய ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தலா இருவர் வீதம் பத்துப் பேர் அமர்த்தப்படுவதுடன் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர் சார்ந்து ஒருவரை நியமிக்கு மாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## தமிழர் பிரச்சினை...

கப்படவில்லை என்றும் அரசியல் பழிவாங்கல்களே இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிக்கான குரல் அமைப்பின் மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை பத்தரமுல்லையில் உள்ள 'அபே கம' கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஆட்சி மாற்றத்தையே நாட்டு மக்கள் தற்போது எதிர்பார்த்து உள்ளார்கள் எனவும் வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்திக்கு கடந்த அரசாங்கத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது எனவும் மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடக்கில் பெயரளவிலே அபிவிருத்திகள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிட்ட அவர், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கிடையாது என்றார்.

மேலும் தமிழ் கூட்டமைப்பினர் கடந்த நான்கு வருடங்களாக அரசியலமைப்பு உருவாக்கம் என்ற விடயத்தை குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்பட்டுக் கொண்டு தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார்.

எனவே தமது ஆட்சி அமையுமிடத்து அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்ட மக்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று கூறினார். (ம-3)

## மருதனார்மடத்...

ளார். இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,10)

## யாழி...

மசிங்க தலைமையில் யாழில் இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சி நிகழ்வு யாழ். முற்றவெளி மைதானத்தில் நான்கு நாட்கள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## சஜித்...

நாளை அலரி மாளிகையில் சஜித் பிரேமதாஸவை சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே, தான் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடப் போவதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். இந்தக் கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ, மங்கள சமரவீர ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

கூட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே, ஹபீர் காசிம் கூட்டத்தை விட்டு வெளியேறினார். அவருடன் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கடுமையாக தர்க்கப்பட்டார். கட்சி ஒரு முடிவை எடுத்தால், அதற்கு கட்டுப்பட வேண்டும், பகிரங்கமாக எப்படி வெளியில் விமர்சிப்பீர்கள் என கிரியெல்ல கூற, இருவருக்குமிடையிலான தர்க்கம் உச்சமடைந்து ஹபீர் காசிம் வெளியேறினார்.

கட்சித் தலைமை எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் செயற்படத் தவறினால், சபை முதல்வர் பதவியை துறக்கப் போவதாக கிரியெல்ல தெரிவித்தார்.

அவரை சமாதானப்படுத்திய ரணில், கட்சியின் கட்டுப்பாட்டிற்கு கீழ்ப்படிவது அனைவரதும் முதன்மையான கடமை என்றார். (ம-3)

## பெரும்பான்மை...

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தன் மேலும் கூறியுள்ளதாவது,

"சிறுபான்மைச் சமூகங்களைத் தொடர்ந்து புறக்கணிப்பதனால் நாடு மீண்டும் அழிவுக்குள் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சுதந்திரமடைந்து 70 வருடங்களைக் கடந்த நிலையில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க தேசிய அரசியல் கட்சிகள் தவறியுள்ளன.

அந்தவகையில் தென்னிலங்கையின் தேசியத் தலைவர்கள் எனக் கூறிக்கொள்வோர், பெரும்பான்மையின மக்களின் ஆதரவை பெறுவதற்காகவும் தமது சுயநல அரசியலுக்காகவும் அவர்களை தவறாக வழிநடத்துகின்றனர்.

மேலும் சிறுபான்மைச் சமூகங்களையும் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## எழுக தமிழ்...

புத்த விகாரைகளை நமது நிலமெங்கும் நிறுவி வருகிறது.

இராணுவ குடியேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு வழியற்ற நிலையில் நிர்க்கதியாக நம் தமிழ் மக்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் தட்டிக்கேட்பதற்கு தமிழ்மக்கள் ஒன்றுசேர்கின்ற ஒரு அரிய வாய்ப்பாக எழுக தமிழ் என்ற புரட்சிகர எழுச்சிமிகுந்த பேரணியை நமது நிலம் சொந்தங்கள் ஈழத்தில் முன்னெடுக்கிறார்கள்.

தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படுகின்ற இந்த எழுக தமிழ் நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு பேரெழுச்சியான நிகழ்வாக நிகழ்த்திக் காட்டவேண்டும்.

இந்த எழுக தமிழ் பேரெழுச்சியின் மூலம் சர்வதேசமும் இந்திய பெருநாடும் இலங்கை அரசும் நம்மை திரும்பிப் பார்க்க வேண்டும்.

நாம் முன்வைக்கின்ற கோரிக்கைகளை ஏற்று அதை நிறைவேற்றித்தர வேண்டும்.

எனவே இந்த நிகழ்வு ஒரு வரலாற்றுப் பெரு நிகழ்வாக நிகழவேண்டும். அதை நாம் நிகழ்த்திக் காட்ட வேண்டும். இதற்கு எழுக தமிழ் பேரெழுச்சியில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என சீமான் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-3)

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு

ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அதிகமானோர் வருகை தராததையினால் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை கூடிய பாராளுமன்ற அமர்வின்போது அதிகளவான ஆளும் தரப்பு உறுப்பினர்கள் வருகை தராதமையினால் வெறிச்சோடி காணப்பட்ட நிலையில் எதிர்வரும் 17ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இல. 1559 திகதி 2019/09/05
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 01 21 32 56
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 2232
ஆங்கில எழுத்து I வெல்லப்பட்ட இலக்கங்கள் 09 50 64 73
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/09/06
சீட்டிழுப்பு இலக்கம் 4000
ஆங்கில எழுத்து Z வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 2 1 6 8 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-09-06
சீட்டிழுப்பு இலக்கம் 197
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 28 38 45 48
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/09/06
சீட்டிழுப்பு இலக்கம் 0429
ஆங்கில எழுத்து N சுப்பர் இலக்கம் 20 வெற்றி இலக்கங்கள் 07 09 25 66

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 723 வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.09.06
விசேட இலக்கம் 9960
வெற்றி இலக்கங்கள் 12 36 54 74 ஆங்கில எழுத்து N
தொலைபேசி: 0112 335 546-47

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06/09/2019 வெற்றி வாரம் 2609 வர்ணம் கருநீலம்
வெற்றி இலக்கங்கள் துலாம் 29 48 51 55
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,294,238/=
2019/09/07 ம் திகதி சனிக் கிழமை இளநீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். Web: www.dlb.lk

கோடிபதி
I 15 21 67 68
வாசி தகை 50806
அடுத்த சுப்பர் ஜக்பொட் 138, 975, 888/=
சீட்டிழுப்பு இல 491 திகதி 06 செப் 2019 வர்ணம் பச்சை
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 277
சீட்டிழுப்பு திகதி 06.09.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 27 57 58 விதி எண் 09
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 43,616,196
2019.09.11 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 www.dlb.lk

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வராத்துப்பளை ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையால் ஆலயத்தின் அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட திருக்குறள், ஆத்திசூடி, தேவாரம் மனனப்போட்டிகளில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு இன்று பிற்பகல் 7.00 மணியளவில் ஆலய பிரதான மண்டபத்தில் அறநெறிப்பாடசாலை யின் நிர்வாகியும் ஆலய பரிபாலனசபை செயலாளருமாகிய அகில இலங்கை சமாதான நீதவான் சாமஸ்ரீ.பெ.பத்மநாதன் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. (ம-3)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 131 9159 (9293)

## British College of Higher Studies

உங்கள் பிள்ளைகள் கனடாவில் படிக்க ஆசைப்படுகிறீர்களா!!!!

CANADA STUDENTS VISA

Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.

Tel No:0212224550 / 0761380212 (C-7521)

## Win Repair

சகல விதமான குளிர்சாதன பெட்டிகளும், A/C களும், சலவை இயந்திரங்களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு – 077 964 8942 (066)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /-Kg
கனடா - 950 /-Kg
ஜேர்மனி - 650 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
இத்தாலி - 700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 (C-7519)

V2 TRAVELS

## V2 TRAVELS



வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

**VISA EXTENSION**

FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## Vacancies

Customer Support Executives

- Possess good telephone etiquette and inter personal skills.
- Good communication skills in English is must
- Prior experience preferred
- No age limit
- Ability to work day and night shift

Call over for an interview or mail us

071 121 4977,021 222 7077 careers.penguin@gmail.com (066)

## British College of Higher Studies

New Batch

## IELTS

Academic / General

Life skills A1 B1 Exam

Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.

Tel No: 021 222 4550 / 076 138 0212 (C-7521)

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த தற்போது கனடாவில் வசிக்கும் பூசம் 2ம் பாதம், கி.பா 15, 1982 ம் ஆண்டு பிறந்த அழகிய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு : 077 382 1565 (105)

## தவறிவிட்டது

கந்தையா பரமநாதன் ஆகிய எனது அடையாள அட்டை, வங்கிக் கடன் அட்டை ஆகியன அடங்கிய பை திருநெல்வேலிக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

க.கனகராசா
நெட்டிலிப்பாய் கோயில் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு. (108)

தொடர்புகளுக்கு : 0769935639/0212215756

## British College of Higher Studies

A/L பரீட்சை முடித்த மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் 16.09.2019 மற்றும் 23.09.2019 ஆரம்பம் பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

Diploma in English - 6 Months
Certificate in English - 3 Months
Spoken English - 3 Months
Spoken Sinhala

30% Discount up to 30.09.2019

Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.

Tel No: 021 222 4550 / 076 138 0212 (C-7521)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு

UK - 600/=
Germaney - 700/=
France - 700/=

திருமுருகன் கொம்றெற்

321, K.K.S.Road, Jaffna.

கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.

0777 554 528 (C-7109)

கனரக வாகனம் (AD License) - /போக்லிஃப்ட் பக்கோ லோடர் (JCB) - க்ரேன் ஒப்பரேட்டர்

## சாரதிகள்/இயக்குநருக்கு

சவுதி அரேபிய அரசாங்க ஆரம்கோ வேலைத்திட்டத்தில்

100க் கணக்கான வேலைவாய்ப்புக்கள்!



சம்பளம் ரூ.72,000 - ரூ.86,400 (1500 - 1800 SAR)

மெக்கானிக் உதவியாளர், வெல்டர், ஏயர் கூலிற்ற், A/C டெக்னீசியன், பெயின்டர், டவுன்ற், டிரைவர், ஹைட் பிட்டர் இன்னும் பல...

2 வருட பணி ஒப்பந்தம் நீடிக்கும், தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு வழங்கப்படும். நாளுக்கு 9 மணி / வாரம் 6 நாள் வேலை. (வயதெல்லை : 21 – 40)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

எமரல்ட் ஜல்

License No. 2268

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் இஷாரா புடவையகம். The Lover's அருகே

077 00 38 215
077 55 46 956
021 221 9 221 (C-7508)

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD JAFFNA

### PHYSICS ENGLISH MEDIUM CLASSES

**DAY CLASS**

**MONDAY TO FRIDAY –** 4.00 – 5.30 P.M

STARTS ON – 09.09.2019

**2020 BATCH**

**MAGNETIC FIELD –** SAT & SUN 11.00 – 12.30 P.M

**CURRENT ELECTRICITY**

MON – 5.30 – 7.00 P.M

TUE – 4.00 – 5.30 P.M

**2021 BATCH HYDRO DYNAMICS**

SAT, SUN 9.30 – 11.00 A.M

WED 5.30 – 7.00 P.M

**BY : MR.M.KUGANESWARAN**

**B.SC HONS DIP EDU** (C-7525)

## ஆளணி தேவை

## ஆர்கலி தனியார் வைத்தியசாலை

வடமாகாணத்தின் அதிவிசேட சேவைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா நகரின் புதிய வடிவம்

- ஓய்வு பெற்ற மருத்துவர்கள், சிறந்த அனுபவமுள்ள பயிற்சி மருத்துவர்கள்
- தகுதியான தாதிய உத்தியோகத்தர்
- பாமசிஸ்ற் ( மருந்தாளர் )
- X-ray தொழில்நுட்பவியலாளர்
- பரிசாரகர் (Attendent – Male) ஆண்
- வரவேற்பாளர் (இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள் தமிழ் - சிங்களம் )

(C-7501)

தொடர்புகொள்ள :- 076 665 8562 (Hotline Number)

ஆர்கலி தனியார் வைத்தியசாலை

இல.21, வைத்தியசாலை சுற்றுவட்டவீதி, குடியிருப்பு, வவுனியா.

## A.R.K. MOBILE SHOP

Mobile Phones | Repairing | Mobile Cards | Reloads | Photocopy | Lamination

Arasady Road, Jaffna. 021 221 6365

## இட மாற்றம்



02.09.2019 தொடக்கம் எமது **A.R.K.MOBILE SHOP** ஆனது அரசடி வீதி, பிறவுண் றோட் சந்தி, யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் இயங்குகிறது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

077 923 3380 (C-7522)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.